வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු



மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 09.12.2021 வியாழக்கிழமை | இதழ் : 04 | பக்கங்கள் : 16

# தடுப்பூசியின் இரு டோஸ்களை பெறாவிடின் சட்ட நடவடிக்கை!

## 3 மாதங்களுக்குள் அமுலாக்கப்படும்



கொழும்பு, டிசெம்பர் 09
நாட்டு மக்கள் கோவிட்-19 தடுப்பூசியின் இரண்டு டோஸ்களை பெறுவதை கட்டாய மாக்கும் வகையில், அடுத்த இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குள் புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம் புக்வெல தெரிவித்துள்ளார்.

15

*அநுராதபுரம் சிறைச் சம்பவ அறிக்கை;*

## லொஹான் ரத்வத்த குற்றவாளியா? நளின் பண்டார உரையால் சர்ச்சை



கொழும்பு, டிசெ. 09
அநுராதபுரம் சிறைச் சாலை சம்பவம் தொடர்பில் விசாரிப்பதற்காக அமைக்கப் பட்ட ஆணைக்குழுவினால் லொஹான் ரத்வத்த குற்ற வாளியாக கூறியுள்ள தாக தகவல்கள் வெளி யாகியுள்ளது என்று

15

## தரமற்ற எரிவாயு விநியோகம் பத்து பேருக்கு எதிராக வழக்கு

### பாதிக்கப்பட்டோருக்கு நட்டஈடும் கோரல்

கொழும்பு, டிசெ. 09
தரமற்ற சமையல் எரி வாயு விநியோகம் தொடர் பில் குற்றவியல் விசா ரணை நடத்துமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன் றில் மனுவொன்று தாக் கல் செய்யப்பட்டுள்ளது.
சட்ட மா அதிபர், வர்த்தக அமைச்சர் பந் துல குணவர்த்தன, இரா ஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண, இரண்டு எரிவாயு நிறுவனங்கள், பாவனையாளர் அலுவல் கள் அதிகார சபையின் தலைவர், தர நிர்ணய பணியகம் உள்பட 10 பேர் மனுவில் பிரதிவாதி களாகக் குறிப்பி டப்பட்டுள்ளனர்.
சட்டத்தரணி

15

## வீதியில் துப்பினால் இனி சட்டம் பாயும்!



கொழும்பு, டிசெ. 09
நாட்டில் பெருந் தெருக்களில் எச்சில் துப்புவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக் கப்படும் என பொலஸார் அறிவித்துள்ளனர்.
பொலிஸ் பாது காப்பு மற்றும்ஜனா திபதி செயலகத்

15

## நோர்வே தூதுவருடன் ரெலோ தனிச் சந்திப்பு



கொழும்பு, டிசெ. 09
இலங்கைக்கான நோர்வே தூதுவர் ட்ரைன் ஜோரான்லி எஸ்க்டல், மற்றும் துணைத் தூது வர் ஹில்டே பேர்க் ஹொன்சன் ஆகி யோரை தமிழ்த்

15

## கொரோனாவுக்கு 28 பேர் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 09
கொரோனா தொற் றால் நாட்டில் நேற்று முன்தினம் புதன்கிழமை 28 மரணங்கள் நிகழ்ந்தன என்று அரசாங்க தகவல் திணைக்களம் நேற்று அறிவித்தது.
60 வயதுக்கு மேற்பட்ட 21

15

## வெளிநாடு செல்லும் இலங்கையருக்கு தடுப்பூசி பெறுவது கட்டாயமானதல்ல!

### சுகாதார மேம்பாட்டு பணியகம்

கொழும்பு, டிசெ. 09
இலங்கையர் ஒருவர் வெளிநாடு செல்லும்போது கட்டாயமாக தடுப்பூசி போட்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள் ளது.
கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அதன் பணிப்பாளர் சிறப்பு மருத்துவ

15

## எரிவாயு விவகாரம் தொடர்பில் உடன் நடவடிக்கை அவசியம்!

### அரசை வலியுறுத்துகின்றார் அநுரகுமார



கொழும்பு, டிசெ 09
சமையல் எரிவாயு சிலிண் டர்களில் இரசாயன கலவை யின் அளவில் மாற்றம் செய் யப்பட்டிருந்தமை உறுதியா கியுள்ளதுடன், அதனாலேயே வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக உறுதியாகியுள்ளதாக

15

## எரிவாயு கலவையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டது உண்மையே!

### விரைவில் நடவடிக்கை என்கிறார் அழகியவண்ண

கொழும்பு, டிசெ. 09
சமையல் எரிவாயு கலவையில் மாற் றங்கள் ஏற்படுத்தியுள்ளதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். எந்த நிறுவனமோ அல்லது அதிகாரிகளோ முறைகேடாக செயற்பட்டிருந்தால் அவர்கள் தொடர் பில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை ஒரு போதும் பின் நிற்காது என கூட்டுறவுசேவைகள்

15

## முன்னாள் போராளிகளை கைவிட்டுவிட்டது அரசாங்கம்!

### பாராளுமன்றில் செல்வம் எம். பி.

கொழும்பு, டிசெ. 09
உறுதியளித்ததுபோல் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளி களுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க அரசாங்கம் தவறியுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி. செல்வம் அடைக்கல நாதன் குற்றம்சாட் டினார்.
பாராளுமன்றத்

15


வீட்டிற்கும் வேலைக்கும் வாசற்படியில்
Door to Door delivery
Any time Including Curfew
தங்கும் அறைகள், உணவகம்/Rooms & Restaurant
இறைச்சி கோழி
Virونthu @ Yarl Pardy
49-51 அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். Amman Road, Nallur, Jaffna.
அறுசுவை உணவுகளை பெற்றுக்கொள்ள அழையுங்கள்
077 734 0026
021 222 6868

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## எரிவாயு விவகாரம்...

குறிப்பிட்டுள்ள ஜே.வி.பி தலைவர் அனுர குமார திஸாநாயக்க, இந்த விடயத்தில் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை கடந்த காலங்களில் கொள்வனவு செய்யப்பட்ட சிலிண்டர்களை மீளப் பெற்றுக்கொள்ளும் போது மூடிகள் திறக்கப்படாத மற்றும் பயன்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளப்படாத சிலிண்டர்களை மாத்திரமன்றி மூடிகள் அகற்றப்பட்ட சிலிண்டர்களையும் மீளப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கைத்தொழில், வர்த்தக அமைச்சுகள் மற்றும் நான்கு இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அனுரகுமார திஸாநாயக்க இவ்வாறு கூறியுள்ளார்.

அதன்போது அவர் மேலும் கூறுகையில்,

கடந்த 6ஆம் திகதி முதல் நாட்டில் 430 எரிவாயு சிலிண்டர் வெடிப்பு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதுடன் அதனால் இரண்டு பேர் மரணம் அடைந்துள்ளதாக ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. எரிவாயு சிலிண்டர்களில் இடம்பெற்ற இரசாயன கலவையின் அளவில் இடம்பெற்ற மாற்றமே சிலிண்டர்கள் தீப்பற்ற காரணம் என்பது உறுதிப்படுத்தப்பட்டடிருக்கின்றது. அதனால் பூதாகரமாகியுள்ள சமையல் எரிவாயு சம்பந்தமான பிரச்னைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்க அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் எரிவாயு சிலிண்டர் பிரச்னைக்கு தீர்வாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையானது நிறுவனங்கள் மற்றும் வீட்டுப் பாவனைக்காக கொள்வனவு செய்யப்பட்டுள்ள எரிவாயு சிலிண்டர்களை மீள பெற்றுக் கொள்வதாக அறிவித்துள்ளது. ஆயினும் அந்த எரிவாயு சிலிண்டர் திறக்கப் படாமல் இருப்பது அவசியம் என கேட்டுக் கொண்டுள்ளது. அது எந்த வகையிலும் சாத்தியமாகாது. ஏனெனில் எரிவாயு சிலிண்டர்கள் வீட்டுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ உபயோகத்திற்காக எடுத்துச் செல்பவர்கள் அதனை உடனடியாகவே பாவனைக்கு எடுத்திருப்பார்கள் என்பதை நுகர்வோர் அதிகார சபை புரிந்து கொள்ள வேண்டும். அதனால் திறக்கப்பட்டிருக்கும் சிலிண்டர்களையும் மீள பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறு சிலிண்டர்கள் பாவிக்கப்பட்டிருந்தால், அந்த சிலிண்டர்களின் பாரத்தை நிறுத்துப்பார்த்து, அதற்கான செலவை கழித்து, சிலிண்டர்களை மீள பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இதேவேளை, அரசாங்கம் பொருட்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகளையும் மட்டுப்படுத்தலையும் அறிவித்துள்ளது ஆனால் அந்த அறிவிப்பு மக்கள் மத்தியில் தெளிவில்லாமல் உள்ளன. அது தொடர்பில் அரசாங்கம் மக்களுக்கு தெளிவுபடுத்துவது அவசியமாகும்.

துறைமுகத்தில் அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய பெருமளவு கொள்கலன்கள் தேங்கிக் கிடக்கின்றன. நீண்டகாலம் அவை துறைமுகத்தில் தேங்கிக் கிடப்பதால் பொருட்கள் பழுதடையும் நிலை ஏற்படலாம். அதனால் அவற்றை விடுவிப்பதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்நிலையில் ஏதேனும் பிரச்னைகள் என்றால் அமைச்சின் செயலாளர்கள் உள்ளிட்ட அமைச்சர்களின் மீது சுமத்த முயற்சிக்கின்றனர். அப்படியென்றால் மூன்றில் இரண்டு அதிகாரம், அமைச்சுப் பதவிகள் மற்றும் 20 ஆவது திருத்தம் என்பன எதற்கு என்று கேட்க வேண்டும் என்றார்.

## லொஹான் ரத்வத்த...

எதிர்கட்சி உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்த நிலையில், யாருக்கும் கிடைக்காத அந்தக் குழுவின் அறிக்கை இவருக்கு மாத்திரம் எப்படி கிடைத்தது என்று சீஐடி ஊடாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று லொஹான் ரத்வத்த தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கைத்தொழில், வர்த்தக அமைச்சுகள் மற்றும் நான்கு இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் இரத்தினக் கல் மற்றும் தங்க ஆபரணங்கள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த சிறைச்சாலைகள் அமைச்சு தொடர்பிலும் கருத்து வெளியிட்டு உரையாற்றினார்.

இவரைத் தொடர்ந்து விவாதத்தில் உரையாற்றிய நளின் பண்டார, கூறுகையில்,

லொஹன் ரத்வத்த, இரத்தினக் கல் மற்றும் தங்க ஆபரணங்கள் இராஜாங்க அமைச்சுக்கு மேலதிகமாக தான் முன்னர் வகித்த சிறைச்சாலைகள் அமைச்சு தொடர்பிலும் கருத்து வெளியிட்டிருந்தார். இதனால் இவர் சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சராக இன்னும் பதவி வகிக்கின்றாரா என்ற குழுப்பங்கங்கள் காணப்படுகின்றன.

அவருக்கு அந்தப் பதவி எவ்வாறு இல்லாது போனது என்பது தெரியும். அப்போது ஜனாதிபதியினால் ஓய்வுப் பெற்ற நீதிபதிகள் அடங்கிய ஆணைக் குழுவொன்றை அமைத்திருந்தார். அவர் குற்றவாளியாகியுள்ளதாக அந்த ஆணைக் குழுவின் தகவல்கள் கூறுகின்றன. இதனால் அந்த அறிக்கையை வழங்குமாறு கேட்கின்றேன் என்றார்.

இதன்போது ஒழுங்குப் பிரச்சனையை முன்வைத்து எழுந்த இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, "யாருக்கும் அந்த அறிக்கையின் தகவல்கள் கிடைக்கவில்லை. அமைச்சரவைக்கும் கிடைக்கவில்லை. இவ்வாறான நிலைமையில் இவருக்கு மாத்திரம் கிடைத்தது என்று விசாரணை நடத்த வேண்டும். இது தொடர்பில் சீஐடிக்கு கூறி தேடிப்பார்க்க வேண்டும்" என்றார்.

இதனை தொடர்ந்து மீண்டும் கருத்து வெளியிட்ட நளின் பண்டார, "நீங்கள் அந்த அறிக்கையை சமர்பித்தால் அதில் என்ன இருக்கின்றது என்று கூறலாம். இரவில் சிறைச்சாலைக்கு சென்று தூக்கு மேடையை பார்க்கப் போன சம்பவம் சரியா? பிழையா? என்று நாட்டுக்கு தெரிந்துகொள்ள முடியும்" என்றார்.

## புதுடில்லி...

தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ சந்தித்து பேச்சு நடத்தியுள்ளது.

இந்த சந்திப்பில் அந்தக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் மற்றும் கட்சியின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் குருசாமி ஆகியோர் பங்கேற்றனர்.

தற்போதுள்ள அரசியல் சூழ்நிலைகள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் பற்றி இதன்போது விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் அரசியல் உரிமை சார்ந்து தொடர்ந்து உறுதியான ஆதரவு நிலைப்பாட்டில் உள்ள நாடான நோர்வேயுடன் தமிழ் தரப்பின் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இந்த சந்திப்பு சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்றதாக ரெலோ விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வெளிநாடு செல்லும்...

வல்லுநர் ரஞ்சித் பதுவன்துதாவ இதனைத் தெரிவித்துள்ளார்.

பயணம் செய்யும் நாடு மற்றும் தேர்ந்தெடுக்கும் விமானத்தைப் பொறுத்து தடுப்பூசி விதிமுறைகள் மாறுபடும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

ஒமைக்ரோன் தொற்றுக்குள்ளான இலங்கைப் பெண்ணின் உறவினர்களிடம் இருந்து எடுக்கப்பட்ட மாதிரிகள் தொடர்பான பரிசோதனை அறிக்கை எதிர்வரும் இரண்டு நாள்களுக்குள் வெளியிடப்படும் என்றும் மருத்துவ வல்லுநர் ரஞ்சித் பதுவன்துதாவ தெரிவித்தார்.

## எரிவாயு...

சந்தைப்படுத்தல்,அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர், மேலும் கூறுங்கியில்,

சமையல் எரிவாயு தொடர்பான சிக்கல்களுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்க அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன . நூற்றுக்கு நூறு வீதம் மக்களை அதிலிருந்து பாதுகாப்பதே அரசாங்கத்தின் நோக்கம். மேற்படி விடயம் தொடர்பில் பரிந்துரைகளை பெற்றுக் கொள்வதற்காக ஜனாதிபதி விசேட குழுவொன்றை நியமித்துள்ள நிலையில் சில தினங்களில் அந்த குழுவின் அறிக்கை கிடைக்கும். அறிக்கையிலுள்ள அந்த பரிந்துரைகளை முழுமையாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

அதற்கான செயற்பாடுகளுக்கு தற்போது நடைமுறையில் உள்ள சட்டத்திற்கு மேலதிகமாக புதிய சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேவேளை மேற்படி விடயத்தில் எந்த நிறுவனமோ அல்லது அதிகாரிகளோ முறைகேடாக செயற்பட்டிருந்தால் அவர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை ஒரு போதும் பின்நிற்காது - என்றார்.

## கொரோனாவுக்கு...

பேரும், 16 - 59 வயது பிரிவை சேர்ந்த 7 பேருமாக 15 ஆண்களும், 13 பெண்களும் தொற்றால் மரணித்தனர்.

இதனால், நாட்டில் தொற்றால் இறந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 533ஆக உயர்ந்துள்ளது. (ஐ)

## முன்னாள்...

தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற கைத்தொழில் அமைச்சு மற்றும் பிரம்புகள்,பித்தளை மட்பாண்டங்கள் ,மரப்பொருட்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குற்றம்சாட்டிய அவர் மேலும் கூறுகையில்,

எங்கள் பிரதேசங்களில் பனைகளில் கிடைக்கும் பல பொருட்களை மக்கள் உற்பத்தி செய்கின்றனர். அதில் கூடுதலாக பெண் தலைமைத்துவ குடும்பங்களே ஈடுபடுகின்றன. அவர்களை பல கைப்பணிப்பொருட்களை செய்யும் வாய்ப்புக்கள் எமது பிரதேசங்களில் உள்ளன. இவ்வாறான நிலையில் வடக்குகிழக்கு மாகாணங்களில் இவ்வாறான உற்பத்திகளை எமது மக்கள் செய்தாலும் அவற்றை என்ன செய்வதென தெரியாதுள்ளனர்.

ஏனெனில் எமது மக்களின் உற்பத்திப் பொருட்கள் வீடுகளில் முடங்கிக்கிடக்கின்றன. உரில் ஏதாவது திருவிழாக்கள் வந்தால் மட்டுமே அவற்றை விற்பனை செய்யக்கூடிய வாய்ப்புள்ளது. இவ்வாறான பொருட்களை சந்தைப்படுத்த கைத்தொழில் அமைச்சு என்ன செய்துள்ளதென்பதனை அமைச்சர் இங்கு அறிவிக்க வேண்டும்.

எனவே எமது மக்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தும் வாய்ப்புக்களை கைத்தொழில் அமைச்சு ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்.

இதேவேளை தொழில் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு அரசாங்கம் வாக்குறுதியளித்திருந்தது. சிறு கைத்தொழில் முயற்சிகளுக்கு வங்கிக்கடன்கள் மூலம் வாய்ப்புக்கள் ஏற்படுத்திக்கொடுப்பதாக அரசு கூறியிருந்தது. ஆனால் எதுவும் நடைபெறவில்லை. இதனால் முன்னாள் போராளிகள் வறுமை காரணமாக தற்கொலை முயற்சிகளில் ஈடுபடும் அளவுக்கு நிலைமை உள்ளது. பலர் தற்கொலையும் செய்துள்ளனர்.

மேலும் பல முன்னாள் போராளிகள் வீதிகளில் கையேந்தி யாசகம் பெறும் நிலையம் காணப்படுகின் றது. எனவே அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு அரசு எந்த வசதி வாய்ப்புக்களையும் செய்ய வில்லை என்ற குற்றச்சத்தை நான் முன் வைக்கின்றேன் என்றார்.

## தரமற்ற எரிவாயு...

நாகாநந்த கொடித்துவக்குவால் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேலும், உரிய குற்றவியல் விசாரணையை நடத்த பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றும் மனுவில் கோரப்பட்டுள்ளது.

எரிவாயு விபத்தில் சேதமடைந்த வீட்டு உரிமையாளர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கு எரிவாயு நிறுவனங்களுக்கு உத்தரவிட வேண்டும் என்று மனுவில் கோரப்பட்டுள்ளது.

சர்ச்சைக்குரிய எரிவாயு கையிருப்பு உள்ள சிலிண்டர்களை சந்தையில் இருந்து அகற்றுமாறும் சட்டத்தரணி நாகாநந்த கொடித்துவக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த மனுமீதான விசாரணை இன்று ரிசீலனைக்கு வருகிறது.

## வீதியில்...

தின் விசேட பணிகள் மற்றும் சுற்றாடல் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட காவல் துறை அத்தியட்சகர் ரொஷான் ராஜபக்ஷவால் பொலிஸ் திணைக்களத்தின் சுற்றுச்சூழல் பிரிவுக்கு இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

வீதிகளில் வெவ்வேறு இடங்களில் எச்சில் உமிழ்வதால் சூழல் மாசுபடுவதுடன், கோவிட் - 19அச்சுறுத்தலும் அதிகரிப்பதனை கருத்தில் கொண்டே இவ்வாறு சட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தண்டனை சட்டக் கோவையின் பிரகாரம் இதுபோன்ற குற்றங்களைச் புரிபவர்களை கைது செய்து நீதிமன்றில் வழக்கு தொடர முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## தடுப்பூசியின்...

தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர்குறிப்பிட்டார்.

கண்டியில் செய்தியாளர்களை சந்தித்த போதே அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தொற்று வீதத்தை குறைக்க உதவும் தடுப்பூசிகள் தொடர்பான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் ஊடாக இலங்கைக்குள் பிரவேசிக்கும் நபர்களுக்கு எல்லை கடத்தல் தொடர்பான சட்டங்களை வலுப்படுத்துவது மற்றும் புதிய விதிமுறைகளை அறிமுகப்படுத்துவது குறித்தும் அவதானித்து வருகின்றோம்.

சுற்றுலாத்துறை, விமான நிலையம், விமானப் போக்குவரத்து மற்றும் அது தொடர்பான தொழில்துறைகளைச் சேர்ந்தவர்களை நாளை சந்தித்து புதிய வேலைத்திட்டம் ஒன்றை வகுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த இரண்டரை வருடங்களில் முழு நாட்டு மக்களும் தியாகங்களைச் செய்திருப்பதால், கோவிட்-19 வைரஸை ஒழிப்பதற்கு பொதுவான வேலைத்திட்டம் பின்பற்றப்பட வேண்டியது மிகவும் அவசியமானது. தடுப்பூசியின் டோஸ் எதுவும் பெறாத ஒரு நபரின் வருகை குறித்தும், கோவிட்-19 வைரஸின் ஒமைக்ரோன் திரிபு குறித்தும் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

பாடசாலைகளை மூடும் எண்ணம் அரசுக்கு இல்லை. பாடசாலைகளில் வகுப்புகளை நடத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தேவைப்பட்டால் மேலதிக அறிவுறுத்தல்கள் வழங்கப்படும். - என்றார். (ஐ)

## இப்படியும் நடக்கிறது...!

தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா. சம்பந்தன், இந்தியப் பிரதமரின் சந்திப்பை தவிர்க்க விரும்பியது ஏன் என்பது அவருக்கு மாத்திரமே தெரிந்த சங்கதி என்று பலரும் கருதிக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால், அவருக்கு மாத்திரமல்ல நிச்சயமாக மற்றுமொருவருக்கும் அது தெரிந்ததுதான் என்பதைக் கண்டுபிடிக்க அரசியல் தெரிந்திருக்கவேண்டும் என்பதல்ல.

அவர் இந்தியா செல்வதை விரும்பாத வேறும் ஒரு தரப்பின் 'நெருக்குவாரத்தால்'தான் அவர் அந்த பயணத்தை தவிர்த்தார் என்கின்றன கொழும்பின் சில அரசியல் வட்டாரங்கள்.

நடந்தது என்ன என்பதை முதலில் பார்ப்போம்.

இந்தியப் பிரதமரை சந்திக்க வேண்டும் என்று நீண்ட நாட்களாகவே காத்திருக்கின்றனர் கூட்டமைப்பினர். கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரிடமிருந்து சம்பந்தனுக்கு முதலில் தகவல் தரப்பட்டது. எந்த நேரத்திலும் அழைப்பு வரலாம். தயாராக இருங்கள் என்பதுதான் அந்தத் தகவல்.

அதாவது, எந்த நேரத்திலும் தயாராக இருங்கள் என்றபோது சம்பந்தன் எந்த எதிர்க்கருத்தும் சொல்லவில்லை. அதனை ஏற்றுக்கொள்கின்றார். சில நாள் கழித்து, 7ஆம், 8ஆம் திகதிகளில் சந்திக்க ஏற்பாடு தயார். புறப்படுங்கள் என்கின்றது இந்தியத் தூதரகம்.

உடனே, சம்பந்தன் சுமந்திரனை அழைத்து பங்காளிக் கட்சிகளுக்கு தகவல் தரச் சொல்கிறார். அவரும் அதனைச் செய்கிறார். அப்படியெனில் அங்கு செல்வதற்கு சம்பந்தன் விரும்பியிருந்தார் என்று தெரிகின்றது.

மாவைக்கு தகவல் சொல்கிறார் சுமந்திரன், மாவை "நான் வரமுடியாவிட்டாலும் (மகனின் திருமணம் 9ஆம் திகதி என்பதால்) சந்தர்ப்பத்தை தவறவிடக்கூடாது. பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுடன் தமிழ் அரசின் சார்பில் சம்பந்தனும் நீங்களும் போகிறீர்கள்தானே. சென்றுவாருங்கள். மாலை, என்ன கதைப்பது என்பது பற்றி பேசுவோம்", என்கிறார்.

சிலவேளை மாவை இப்படிச் சொல்வார் என்றுகூட சுமந்திரன் நினைத்திருப்பாரோ தெரியவில்லை. சம்பந்தனுக்கும் இந்தத் தகவலைத் தெரிவிக்கிறார் மாவை.

மறுநாள் சுமந்திரனை அழைத்த சம்பந்தன், தான் தனியாக பயணம்செய்ய முடியாத நிலை. என்னுடன் எனது மகளும் பயணம் செய்வதுதான் நல்லது. ஆனால், அவரின் 'பாஸ்போர்ட்'டைக் காணவில்லை என்றாராம். ஏற்கனவே சம்பந்தனின் 'பாஸ்போர்ட்'டும் காலவதியாக இருந்து, சுமந்திரன் சமல் ராஜபக்ஷவின் உதவியுடன் 30 நிமிடத்தில் புதுப்பித்திருந்தார்.

'பாஸ்போர்ட்'டைக் காணவில்லை என்றால், அது குறித்து பொலிஸில் முறைப்பாடு செய்து, பெற்றுக் கொள்வது சற்று தாமதமாகலாம். சில மணி நேரங்களில் சுமந்திரனை மீண்டும் அழைத்த சம்பந்தன், தானே தூதரகத்திடம் சொல்லிவிட்டாரெனவும், குறிப்பிட்ட தினத்தில் வரமுடியாமல் இருக்கின்றது. வேறு ஒரு திகதியை ஒதுக்கித்தருமாறு தான் கேட்டுவிட்டாரென்றும் சம்பந்தன் தகவல் சொல்கிறார் சுமந்திரனுக்கு. பங்காளிக்கட்சிகளுக்கு தகவல் சொல்லச் சொல்கிறார்.

இந்தத் தகவல்கள் எல்லாம் சுமந்திரன் பங்காளிக் கட்சித் தலைவர்களுக்கு சொன்ன தகவல்தான். இதுகூட உண்மையா என்பதும் அவருக்கு மட்டுமே தெரிந்தவை.

கடந்த வாரம் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ புதுடில்லி சென்று திரும்பியமை நீங்கள் அறிந்ததே. புதுடில்லியில் அவர் பிரதமர் மோடியைச் சந்திப்பார் என்றும் கூறப்பட்டிருந்தது. ஆனால், அவர் சந்திக்கவில்லை. அப்படியெனில் அவரைச் சந்திக்க மோடி தவிர்த்திருக்கிறார் என்றே தெரிகின்றது. ஆனால், அவர் புதுடில்லியிலிருந்து திரும்பியதும் இந்திப் பிரதமர் சந்திப்புக்கு கூட்டமைப்பை அழைக்கிறார் என்றால் அதனைப் புரிந்துகொள்ள முடியும்.

ஆனால், அந்தப் பயணத்தை சம்பந்தன் ஏன் தவிர்க்கிறார் என்பதைத்தான் புரிந்துகொள்ள முடியவில்லை.

கைகளை நனைத்துக்கொண்டால் பல்வேறு ஊகங்கள் தோன்றுவதையும் தவிர்க்க முடியாதுதானே?

இந்தச் சந்திப்பு தவிர்ப்பு ஏற்படுத்தியிருக்கும் அதிர்வலையை- அதாவது சம்பந்தனுக்கு எதிராக (சம்பந்தன் என்றால் அதில் பங்குகொள்ளாவிட்டாலும் சுமந்திரனுக்கும் பங்கு கிடைத்து விடும் என்பது தெரிந்தவையே) மக்கள் மனதில் ஏற்பட்டிருக்கும் அந்த உணர்வலையை மாவையின் பக்கம் திருப்பிவிட நடக்கும் சதிகள் பற்றி நாளை பார்ப்போம்.

- ஊர்க்குருவி

## யாழ். நகரில் விபத்து இளைஞர் படுகாயம்!

யாழ்ப்பாணம், டிசெ. 09

யாழ். நகரின் சிவலிங்கப்புளியடி சந்தியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழ். பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட காங்கேசன்துறை வீதி - சிவலிங்கப்புளியடியில் மோட்டார் சைக்கிளும் ஓட்டோவும் ஒன்றன்பின் ஒன்றாக மோதி இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கிளிநொச்சியை சேர்ந்த இளைஞன் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஓட்டோ சாரதியை கைது செய்துள்ளதாகக் கூறிய பொலிஸார், இந்த விபத்தின்போது அருகிலிருந்த வர்த்தக நிலையமும் சேதமடைந்ததாகத் தெரிவித்தனர். அத்துடன், மேலதிக விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ-3)

## விபத்துகளை தவிர்க்க சைக்கிளுக்கு ஸ்ரிக்கர்!



யாழ்ப்பாணம், டிசெ. 09

வீதி விபத்துக்களை தவிர்க்கும் நோக்கில் "உங்களின் பாதுகாப்பிற்காக நாம்" எனும் கருப்பொருளில் சைக்கிள்களுக்கு ஸ்ரிக்கர் ஒட்டும் பணியை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இதன் ஓர் அங்கமாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொலிஸார் நேற்று மாலை காங்கேசன்துறை வீதியில் சைக்கிள்களில் பயணித்தோரை மறித்து ஸ்ரிக்கர்களை ஒட்டினர்.

யாழ்ப்பாண மாவட்ட பொலீஸ் நிலையங்களுக்கு பொறுப்பான சிரேஸ்ட பொலிஸ் அத்தியச்சகரின் ஆலோசனைக்கமைவாக, மாவட்ட போக்குவரத்து பிரிவு மற்றும் யாழ்ப்பாண பொலிஸ் போக்குவரத்து பிரிவும் இணைந்து இந்த நடவடிக்கையை முன்னெடுத்தன. (ஐ-3)

## வடக்கில் நேற்று 10 தொற்றாளர்!

யாழ்ப்பாணம், டிசெ. 09

யாழ். போதனா மருத்துவமனையில் 2 வயது பெண் குழந்தை உட்பட வடக்கில் மேலும் 10 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா மருத்துவமனை ஆய்வு கூடத்தில் நேற்று 123 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 10 தொற்றாளர்களும் இனங்காணப்பட்டிருந்தனர்.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் 4 பேர் (32, 39, 59, 83 வயது பெண்கள்), யாழ். போதனா மருத்துவமனையில் - 02 பேர் (2வயது சிறுமி மற்றும் 28 வயது பெண்)

வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் 02 பேர் (59 வயது ஆண், 60 வயது பெண்)

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் - ஒருவர் (27 வயது பெண்)

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டது. (ஐ)

## கல்வி tv CHANNEL-1

**09.12.2021**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

## கல்வி tv CHANNEL - 2

**09.12.2021**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
09.12.2021 வியாழக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 23

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# அரசியல்வாதிகளுக்கு வரலாற்று அறிவு அவசியம்?

ஒரு மக்கள் கூட்டத்தை பிரதிநிதித்துவம் செய்பவர்களுக்கு - தாங்கள் கடந்துவந்திருக்கும் வரலாற்று காலகட்டம் தொடர்பில், ஆகக்குறைந்த அறிவாவது இருக்க வேண்டியது அவசியம். ஒரு குறித்த கட்சியை பிரதிநிதித்துவம் செய்பவர்கள் தாங்கள் பிரதிநிதித்தும் செய்யும் கட்சி எவ்வாறானது - அந்தக் கட்சியின் வரலாறு எத்தகையது - தங்களின் மூத்த தலைவர்களின் சிந்தனைகள் எப்படியானவையாக இருந்திருக்கின்றன? - என்பன பற்றி ஆகக்குறைந்த அறிவையாவது அவர்கள், பெற்றிருக்க வேண்டும். விமர்சனங்களுக்கு அப்பால், ஒரு காலகட்டத்தில் இலங்கை தமிழ் அரசு கட்சியின் - பின்னர் - தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களாக இருந்தவர்களிடம், தமிழர் அரசியல் வரலாறு தொடர்பில் போதிய புரிதலும் தெளிவும் இருந்தது. ஆயுத விடுதலை இயக்கங்களின் தலைவர்கள் மத்தியிலும் தமிழ் மக்களின் பிரச்னைகள், அதனுடன் தொடர்புடைய அரசியல் விவகாரங்கள் தொடர்பில் போதுமான தேடல்களும் புரிதல்களும் இருந்தன. ஆனால், இன்று நிலைமைகள் தலைகீழாகியிருக்கின்றன.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் ராஜபுத்திர, கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு நேர்காணல் ஒன்றை வழங்கியிருக்கின்றார். அதில் - இலங்கை சுதந்திரமடைந்த 1948இலிருந்து 1978 வரையிலான காலப்பகுதி வரையில் தமிழ் மக்களுக்கு எதிராக எந்தவொரு வன்முறையும் இடம் பெறவில்லையென்று குறிப்பிட்டிருக்கின்றார்.

1956, 1958, 1977 காலப்பகுதியில் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற சிங்கள மேலாதிக்க வன்முறைகளை அவர் அறியாமல் இருப்பது ஒரு வகையில் வேடிக்கையாகவும், பிறிதொரு புறம் தமிழ் அரசு கட்சியின் இன்றைய நிலைமையையும் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகின்றது.

இந்த காலத்தில் இடம்பெற்ற சிங்கள மேலாதிக்க வன்முறைகள் கொடுத்த உற்சாகத்தின் விளைவாகத்தான், 1983இல் தமிழ் மக்களுக்கு எதிராக பாரியளவிலான, திட்டமிட்ட, இன அழிப்பு நோக்க கொலைகள் இடம்பெற்றிருந்தன. தமிழர் அரசியலை ஆர்வத்துடன் கற்க விரும்பும் ஒரு மாணவன்கூட, இவ்வாறான விடயங்களை இலகுவாக கற்றுக்கொள்ள முடியும். அவ்வாறிருக்கின்றபோது, ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு, தான் சார்ந்த கட்சியின் வரலாறு தொடர்பிலேயே போதிய புரிதல் இல்லாமல் இருக்கின்றது.

கிழக்கு மாகாண சபையில் தமிழ் அரசு கட்சி சார்பில் அமைச்சராக இருந்த ஒருவர், முன்னர் தெரிவித்திருந்த விடயமொன்றை நினைத்துக் கொள்ள வேண்டியிருக்கின்றது. அதாவது, “எங்களுடையவர்களோடு ஒப்பிட்டால் அவங்கள் (முஸ்லிம் மாகாண சபை உறுப்பினர்கள்) நல்லாத்தான் பேசுகின்றார்கள். வரும் போது ஒன்றும் தெரியாவிட்டாலும், பின்னர் படித்து தங்களை வளர்த்துக் கொள்கின்றனர்” - என்று அந்த அமைச்சர் தங்களுடைய இயலாமையை வெளிப்படுத்தியிருந்தார். உண்மையில் மக்களை பிரதிநிதித்துவம் செய்பவர்களுக்கு ஆகக் குறைந்த அரசியல் அறிவு இருக்க வேண்டியது அவசியமாகும். அரசியல் அறிவு என்பதை, ஒருவரின் கல்வித் தகைமையாக புரிந்துகொள்ளக் கூடாது. உதாரணமாக மாகாண சபை உறுப்பினராக இருக்கும் ஒருவருக்கு, மாகாண சபை முறைமை தொடர்பிலும் - அது எவ்வாறு வந்ததென்பது தொடர்பில் அடிப்படையான அறிவிருக்க வேண்டியது அவசியம். தான் இருக்கும் இடத்தையே அறிந்து கொள்ள முடியாத ஒருவரால் - எவ்வாறு அந்த இடத்தை உச்சளவில் மக்களுக்காகப் பயன்படுத்த முடியும்?

தங்களுடைய கட்சியின் வரலாறு என்ன - தமிழர் அரசியல் கடந்து வந்த பாதை என்ன? - என்பன தொடர்பில் தேடிப் படிக்கக் கூடியவர்களாகவும், விடயங்கள் தொடர்பில் பேசக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டியது, அரசியல்வாதிகளின் அடிப்படையான தகுதியாகும். எந்த மொழியில் பேசுவதென்பது முக்கியமான ஒன்றல்ல. தனது தாய்மொழியில் பேசுவது அவமானமும் அல்ல. ஆனால், விடயங்களை தெளிவாகவும், அறிவுபூர்வமாகவும், தர்க்கரீதியாகவும் பேசுவதுதான் முக்கியமானது.

ஆங்கிலத்தில் - தமிழ் மக்களின் வரலாற்றை பிழையாக பேசுவதை விடவும், தமிழில் சரியாகப் பேசுவது மேலானது. 2009இற்கு பின்னர் தேர்தல் அரசியலில் ஆர்வம் காட்டுபவர்களில் பலர், பதவி நிலைகளையும், சமூக அந்தஸ்தையும் முன்வைத்தே தமிழ்த் தேசியத்தின் பக்கமாக தாவுபவர்களாக இருக்கின்றனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழரின் அரசியல் வரலாற்று காலகட்டத்தோடு எந்தவொரு தொடர்பும் இல்லாதவர்கள். இதன் காரணமாகவே அவர்களால் வரலாற்றின் தொடர்ச்சியாக தங்களைக் காண்பிக்க முடியவில்லை. மக்கள் நன்கறிந்து - தெளிவுடன் வாக்களிப்பதன் மூலம் மட்டும்தான் இந்த பிரச்னையை தீர்க்க முடியும். ஏனெனில் - இது, அடிப்படையில் மக்களின் பிரச்னை.

# யார் இந்த பிபின் ராவத்?



*2016ஆம் ஆண்டின் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியன்று, இந்திய இராணுவத்தின் 27ஆவது தலைமைத் தளபதியாக நியமிக்கப் பட்டார் பிபின் ராவத். தலைமைத் தளபதி யாகப் பதவியேற்பதற்கு முன்பு, துணை தலைமைத் தளபதியாகப் பணியாற்றிவந்தார்.*

*உத்தராகண்ட்டில் பிறந்த பிபின் ராவத் தின் குடும்பம், பல தலைமுறைகளாகத் தொடர்ந்து இராணுவத்தில் பணியாற்றுகிறது. ஜெனரல் பிபின் ராவத், சிம்லாவில் உள்ள சென். எட்வார்ட் பள்ளியில் படித்தார். அதன்பின்னர், டெஹ்ராடூனிலும், தமிழகத்தின் வெலிங்டனில் உள்ள பாதுகாப்பு சேவை உயரதிகாரிகளுக்கான பயிற்சிக் கல்லூரியில் பட்டப்படிப்பு முடித்தார். பின்னர், தேசிய பாதுகாப்பு கல்லூரியிலும் பல்வேறு பிரிவுகளில் தேர்ச்சி பெற்றார்.*

*சென்னை பல்கலைகழகத்தில் பாதுகாப்பு குறித்த படிப்பில் அவருக்கு எம். பில் பட்டம் வழங்கப்பட்டது. மேலாண்மை மற்றும் கணனி அறிவியலில் பட்டயப்படிப்பை முடித்துள்ளார். இராணுவ போர்த்திறன் குறித்த தனது ஆய்வுக்காக, கடந்த 2011-ம் ஆண்டு, மீரட்டிலுள்ள சௌத்ரி சரண் சிங் பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டம் பெற்றார், பிபின்.*

*1978ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம், தனது தந்தை பணியாற்றிய பதினோராவது கூர்கா ரைபிள்ஸ் பிரிவின் ஐந்தாவது படையணியில் சேர்ந்தார். தொடர்ந்து, டேராடூனில் உள்ள இந்திய ராணுவ பயிற்சி நிலையத்தில் இந்திய ராணுவ இயக்குநரகத்தின் தலைமை அதிகாரி உட்பட பயிற்சி அளிக்கும் பொறுப்பை வகித்தார். மத்திய பிராந்தியத்தில் தளபாடங்கள் பிரிவு அலுவலராகவும் பிபின் ராவத் பணியாற்றி இருக்கிறார். மேலும், இராணுவ செயலர் பிரிவில், துணை இராணுவ செயலாளர் மற்றும் கேணல் அந்தஸ்தில் இராணுவ செயலாளராகவும் பணியாற்றியிருக்கிறார்.*

*உயர்ந்த மலைகளின்மீது போர் புரிதலிலும், ஆட்சிக்கு எதிரான ஆயுதக்குழுக்களை ஒடுக்குவதிலும் கை தேர்ந்தவராக செயல்பட்டார். நாடு முழுவதும் பல்வேறு இராணுவப் படைகளுக்குத் தலைமை தாங்கியதோடு, இராணுவம் குறித்த கல்வியில் ஆர்வம் கொண்டிருந்தார்.*

*2008ஆம் ஆண்டு, கொங்கோ நாட்டுக்கு ஐக்கிய நாடுகள் சார்பாக அனுப்பப்பட்ட அமைதிக்குழுவில், இந்தியாவின் பிரதிநிதிகளுள் ஒருவராகச் சென்றார். அவரின் தலைமையின் கீழ் அமைதிக்குழு மிகச்சிறப்பாகச் செயல்பட்டதாகவும், அதுவரை அமைதியாக இருந்த இந்தியாவின் அணுகுமுறை, அவரின் தலைமைக்குப் பின் இரும்புக்கரம் கொண்டதாக மாறியதாகவும் அந்த அமைதிக்குழுவில் இருந்தவர்கள் அவரைப் பற்றி கருத்து தெரிவிக்கின்றனர்.*


*2015 ஜூன். இந்திய இராணுவம் மிக மோசமான ஒரு பேரிடியை சந்தித்தது. நாகாலாந்து தீவிரவாத அமைப்பு ஒன்று, மணிப்பூர் மாநிலத்தில் இந்திய இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தியது. 18 இராணுவத்தினர் பரிதாபமாக இறந்தார்கள். தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள், பாதுகாப்பாக மியன்மார் நாட்டு காடுகளில் சென்று பதுங்கினார்கள். இந்திய ராணுவம் இதை ஒரு கௌரவப் பிரச்னையாக எடுத்துக் கொண்டது. உடனடியாக மியான்மர் காடுகளில் நுழைந்து சர்ஜிகல் ஸ்ட்ரைக் நடத்தி, அந்த தீவிரவாதிகளைக் கொன்றது. அந்தத் தாக்குதலை நடத்தியவர், அப்போது லெப். ஜெனரலாக இருந்த பிபின் ராவத். அப்போது நாகாலாந்தில் இருந்த நேரத்தில் ஒரு ஹெலிகொப்டர் விபத்தில் சிக்கி நூலிழையில் உயிர் தப்பினார் ராவத். கடைசியில் அவர் ஹெலிகொப்டர் விபத்திலேயே தமிழகத்தில் உயிரிழந்தார்.*

*2016 செப்ரெம்பர். காஷ்மீரில் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு அருகே உரி என்ற இடத்தில் இந்திய இராணுவ முகாம் மீது ஜெய்ஷ் இ முகமது அமைப்பினர் தீவிரவாதத் தாக்குதல் நடத்தினர். இதில் 19 இராணுவத்தினர் உயிரிழந்தனர். இன்னும் 20 பேர் மோசமாக காயமடைந்தனர். தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிக்குச் சென்று விட்டனர். அப்போது பிபின் ராவத் இந்திய ராணுவத்தின் துணைத் தளபதி. எல்லை தாண்டி சென்று தீவிரவாதிகளுக்கு பதிலடி கொடுக்க இந்திய இராணுவம் முடிவெடுத்தது. இந்த சர்ஜிகல் ஸ்ட்ரைக்கை திட்டமிட்டுக் கச்சிதமாக நடத்திக் கொடுத்தார் ராவத். பாகிஸ்தான் பகுதியில் இருந்த பல தீவிரவாத முகாம்கள் அழிக்கப்பட்டன.*

*அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகளின் ராணுவம்தான் எல்லை தாண்டிச் சென்று சர்ஜிகல் ஸ்ட்ரைக் நடத்தும் என்றிருந்த நிலையை மாற்றி, இந்திய இராணுவத்துக்கும் அப்படி ஒரு முகம் கிடைக்கக் காரணமாக இருந்தவர் பிபின் ராவத்.*

*நன்றி - விகடன்*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



டிசெம்பர் - 09 வியாழக்கிழமை
பிலவ வருடம் - கார்த்திகை - 23
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 1.30 - 3.00
திதி : சஷ்டி



## இன்றைய ராசிபலன்

09.12.2021

**மேடம்** மனதில் உள்ள தேவையற்ற பயங்களைப் புறந் தள்ளி விடுங்கள். குடும்பத்தினருக்கு இன்று மகிழ்ச்சியான நாளாக அமையும். இன்று சொந்த வீட்டைப் புதுப்பித்து அழகுபடுத்துவீர்கள்.

**இடபம்** வழிகாட்டி ஒருவரின் ஆலோசனை உங்களுக்கு கைகொடுக்கும். திடீர் பயணங்கள் இருக்கும். சுப நிகழ்ச்சி குறித்த பேச்சு நன்கு முடியும். தாயார், தாய்வழி மூலம் உதவி கிடைக்கும்.

**மிதுனம்** அரசாங்க விஷயங்கள் சற்று தாமதமாக முடியும். நட்பு வட்டம் விரியும். அறிமுகமாகும் நபர்களிடம் அதிக நெருக்கம் காட்ட வேண்டாம்.பெரியோரின் ஆலோசனைகளை கேட்பது மிகவும் நலம் தரும்.

**கடகம்** உடல் உபாதைகள் அனைத்தும் நீங்கும். கலகலப் பான நாள். சகோதர, சகோதரிகளின் அன்பும், ஆதரவும் அதிகரிக்கும். உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும்.

**சிம்மம்** புதிய வேலைக்காக காத்திருந்தோருக்கு நல்ல வேலையும், சம்பளமும் அமையும். சிலர் வெளி நாடு செல்வீர்கள். நல்ல வரன் அமையும். குடும் பத்தில் ஒருவருக்கு சுபநிகழ்ச்சி ஒன்று ஏற்பாடாகும்.

**கன்னி** நகைச்சுவை என்ற பெயரில் யாரையும் புண்படுத்தா தீர்கள். உங்களின் அவசர செயல் தவறாக வாய்ப் புள்ளது. புது முயற்சி செய்ய வேண்டாம். அலுவல கத்தில் மரியாதை கூடும். திறமைகள் வெளிப்படும்.

**துலாம்** வாழ்வில் நீங்கள் ரசித்து மகிழத்தக்க நிகழ்ச்சி ஒன்று நடைபெறும். மனக்குழப்பம் நீங்கும். வீடு, வாகன வகையில் பராமரிப்பு செலவு. குடும்பத்தில் ஒருவருக்கு வெற்றிச் செய்தி வந்து சேரும்.

**விருட்சிகம்** குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். வரவு உயரும். புதிய ஆபரணம் வாங்குவீர்கள். தாயாரின் உடல் நிலை சீராகும். சவாலான விஷயங்களைக்கூட இன்று எளிதாக செய்து முடிப்பீர்கள்.

**தனுசு** பிறருக்கு உதவி செய்வதற்காக தீய விஷயத்தில் ஈடு பட வேண்டாம். பணியில் ஏற்படும் சிறு சிறு இடர் பாடுகளை சுலபமாக சமாளிப்பீர்கள். சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள். எதிரிகள் விலகுவார்கள்.

**மகரம்** இன்று எது செய்வதாக இருந்தாலும் அதிக முயற்சி தேவைப்படும். நட்பு வட்டம் விரிவடையும். தாயாரின் உடல்நலம் மேம்படும். உங்களின் முயற்சி வெற்றி பெறும். பொருள் வரவு உண்டு.

**கும்பம்** செல்வாக்கு மிக்க ஒருவரின் சந்திப்பு நல்ல பல னைக் கொடுக்கும். சுபவிஷயங்கள் நடைபெறும். யாரிடமும் வெளிப்படையாக பேச வேண்டாம். சிறு சிறு பிரச்னைகளை எதிர்கொண்டு வெல்வீர்கள்.

**மீனம்** வேற்றுமொழி பேசும் ஒருவர் மூலம் நன்மை அடைவீர்கள். எதிர்பாலினத்தவரால் நன்மை கிடைக்கும். சுபச்செலவு உண்டு. நண்பர்களுக்கு நன்மைகள் நடக்கும். உழைப்பு அதிகரிக்கும்.

# ஏழு தமிழர் விடுதலை குறித்து ஆளுநரிடம் தமிழக அரசு மீண்டும் வலியுறுத்த வேண்டும்

## ராமதாஸ் கோரிக்கை

சென்னை,டிசெ. 09

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறைத் தண்டனை அனுபவித்துவரும் ஏழு தமிழர்களின் விடுதலை தொடர்பாக ஆளுநரிடம் தமிழக அரசு மீண்டும் வலியுறுத்த வேண்டும் என்று பாமக நிறுவனர் எஸ்.ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து பாமக நிறுவனர் ராமதாஸ் வெளியிட்ட அறிக்கையில், "பேரறிவாளன் உள்ளிட்ட 7 தமிழர்கள் விடுதலை விவகாரத்தில் முடிவெடுக்க வேண்டியது தமிழக ஆளுநர்தான். இந்தியக் குடியரசுத் தலைவர் அல்ல என்பதை பேரறிவாளன் வழக்கில் உச்சநீதிமன்றம் தெரிவித்திருக்கும் கருத்துகள் மீண்டும் ஒருமுறை உறுதி செய்துள்ளன. இந்த உண்மை ஆளுனர் மாளிகைக்கும் நன்றாகத் தெரியும் என்ற போதிலும் முடிவெடுப்பதில் காலதாமதம் செய்வது நியாயமல்ல.



உச்சநீதிமன்றத்தில் இதுதொடர்பாக பேரறிவாளன் தொடர்ந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்த போது சில விஷயங்களை நீதிபதிகள் தெளிவுபடுத்தி விட்டனர். பேரறிவாளன் உள்ளிட்ட 7 தமிழர்கள் விடுதலை குறித்து முடிவெடுப்பதில் தமிழக ஆளுனர் காலதாமதம் செய்வது ஏற்கத்தக்கதல்ல.

இந்த விஷயத்தில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 161-ஆவது பிரிவின்படி தமிழக அமைச்சரவை அளித்த பரிந்துரை மீது முடிவெடுக்க வேண்டியது தமிழக ஆளுனர் தான் 7 தமிழர் விடுதலை குறித்து இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 72 ஆவது பிரிவின்படி இந்திய குடியரசுத் தலைவர் முடிவெடுக்க முடி யாது என்பன தான் உச்ச நீதிமன்றம் தெளிவு படுத்திய விஷயங்கள் ஆகும். இதையே தான் பல ஆண்டுகளாக பாட்டாளி மக்கள் கட்சியும் வலியுறுத்தி வருகிறது.

7 தமிழர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக் கப்பட்டு விட்ட நிலையில், தண்டனைக் காலம் முடி வடைந்த பிறகும் விடுதலை செய்வதற்கு மறுப்பது எந்த வகையிலும் நியாயமில்லை. அவர்களுக்கு இழைக்கப்படும் மனித உரிமை மீறல் நீடிப்பது அனுமதிக்கக்கூடாது. இவர்களின் விடுதலை தொடர்பாக ஆளுநரிடம் தமிழக அரசு மீண்டும் வலியுறுத்த வேண்டும்" என்று பா.ம.க. நிறுவனர் எஸ்.ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

# பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் ஹிந்தியைத் திணிக்க முயற்சியா?

## அன்புமணி ராமதாஸ் கடும் கண்டனம்

சென்னை, டிசெ. 09

அழகான தமிழ் முழக்கத்தை தமிழக அரசு உருவாக்கியுள்ள நிலையில், ஹிந்தி முழக்கத்தை பாரதிதாசன் பல்கலைக்கழகம் பயன்படுத்தியிருப்பது இந்தித் திணிப்பு தான் என பா.ம.க. இளைஞர் அணி செயலாளர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

அன்புமணி ராமதாஸ் இது தொர்பில் கூறி இருப்பதாவது:-

திருச்சியில் இன்று நடைபெறவிருக்கும் பாரதிதாசன் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவுக்கான அழைப்பிதழில் விடுதலை நாள் பவள விழாவைக் குறிக்க 'ஆசாதி கா அம்ரித் மகோத்சவ்' என்ற இந்தி முழக்கம் ஆங்கிலத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது கண்டிக்கத்தக்கதாகும்!



விடுதலை நாள் பவள விழாவுக்கான வாசகமாக 'ஆசாதி கா அம்ரித் மகோத்சவ்' என்பதை மத்திய அரசு அறிவித்துள்ளது. அதை "சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா" என தமிழாக்கம் செய்துள்ள தமிழக அரசு, அதைத் தான் பயன்படுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளது. அதை பாரதிதாசன் பல்கலைக்கழகம் மீறியுள்ளது!

அழகான தமிழ் முழக்கத்தை தமிழக அரசு உருவாக்கியுள்ள நிலையில், இந்தி முழக்கத்தை பாரதிதாசன் பல்கலைக் கழகம் பயன்படுத்தியிருப்பது இந்தித் திணிப்பு தான். தமிழக அரசின் ஆணையை மதிக்காத பாரதிதாசன் பல்கலைக்கழகம் யாருடைய கட்டுப்பாட்டில் செயல் படுகிறது?

அனைத்து தமிழக அரசு நிறுவனங்களும் மாநில அரசின் ஆணையை மதிப்பதை உறுதி செய்ய வேண்டும். ஆணையை மதிக்காமல் இந்தி முழக்கத்தை பயன்படுத்தும் நிறுவனங்கள் மீது தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்! இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# சசிகலா அ.தி.முகவில் இருந்திருந்தால் உட்கட்சித் தேர்தல் நடந்திருக்காது

## புகழேந்தி

சென்னை, டிசெ. 09

சசிகலா அ. தி. மு. கவில் இருந்திருந்தால் உட்கட்சித் தேர்தல் பிரச்னை இருந்திருக்காது என அ. தி. மு. க. முன்னாள் செய்தி தொடர்பாளர் புகழேந்தி தெரிவித்தார்.

அதிமுக ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் தேர்தலை சரியாக நடத்தவில்லை. என்ன நடந்தாலும் சரி நியாயம்



கிடைக்கும் வரை விடப்போவதில்லை அதில், எனது பங்கு நிச்சயம் இருக்கும். நல்ல தீர்ப்பு வரும் என்று எதிர்பார்க்கிறோம். ஜெயக்குமார் பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்த ஒரே மனிதர். அ. தி. மு.கவில் பைலாவை திருத்த வேண்டிய அவசியமே இல்லை. தலை வரின் பைலாவை திருத்துவதற்கு இவர்கள் யார்? கட்சியிலிருந்து இபிஎஸ் ஓபிஎஸை துரத்தியடிக்க வேண்டும், யார் வேண்டுமானாலும் அந்த தலைவர் பதவிக்கு வரலாம், ஆனால், அவர்களை கட்சித் தொண்டர்கள் முறையாக தேர்வு செய்ய வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# வடமராட்சியில் ஒதுங்கிய சடலம் சிம்பன்சி குரங்கினுடையதாம்!

## விசாரணையின்றி புதைத்தது பொலிஸ்?

வடமராட்சி, டிசெ. 09

**வடமராட்சி கிழக்கு மணல்காட்டில் கடந்த நவம்பர் 26ஆம் திகதி மீட்கப்பட்ட சடலம் சிம்பன்சி குரங்கின் உடையது எனத் தெரிவித்து விசாரணைகள் எவையு மின்றி பொலிஸார் புதைத்துள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.**

வடமராட்சி கடற்பரப்பில் 6 சடலங்கள் மீட்கப்பட்டன என்று பொலிஸ் புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்த நிலையில், பருத்தித்துறை ஆதார மருத்துவனையில் 5 சடலங்களே ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், கடந்த நவம்பர் 26ஆம் திகதி வடமராட்சி - மணல்காடு பகுதியில் கரையொதுங்கிய உடலே இவ்வாறு புதைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. அந்த சடலம் சிம்பன்சி குரங்கினுடையது என்பதாலேயே புதைக்கப்பட்டதாக உறுதிப்படுத்தாத தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும், மீட்கப்பட்ட சடலம் குறித்து நீதிமன்றத்துக்கு தகவல் அளிக்காமலேயே புதைக்கப்பட்ட இந்த சடலம் குறித்து சந்தேகம் எழுந்துள்ளது.

எது எப்படி இருப்பினும், விலங்குகள் மீட்கப்பட்டாலும் கூட கால்நடை மருத்துவ அதிகாரியால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர், நீதிவானின் அனுமதி பெறப்பட்டே புதைக்கப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-5)



நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் முயற்சியால்

# மழையால் வீட்டை இழந்த குடும்பத்துக்கு நிரந்தர வீடு!

யாழ்ப்பாணம், டிசெ. 09

கடும் மழையால் மண்வீடு இடிந்து வீழ்ந்ததில் வசிப்பதற்கு பாதுகாப்பான வீடின்றி தவித்த கோண்டாவிலை சேர்ந்த குடும்பம் ஒன்றுக்கு நிரந்தர வீடு ஒன்று அமைத்து வழங்கப்பட்டது.

நல்லூர் பிரதேச சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் எஸ். மதிசுதனின் முயற்சியால் கோண்டாவிலை சேர்ந்த சமூக சேவகரான சுராங்கனியின் நிதியுதவியில் அமைக்கப்பட்ட இந்த வீடு நேற்று முன்தினம் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் க. தேவராஜா, ஆசிரியர் ஞான திருக்கேதீஸ்வரன், ஓய்வு நிலை அதிபர் சண். வாமதேவன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கடந்த மாதம் ஏற்பட்ட கடும் மழையால் கோண்டாவில் சென். செபஸ்தியார் வீதியில் மண்வீட்டில் வசித்து வந்த குடும்பத்தின் வீடு இடிந்து வீழ்ந்தது. அந்தக் குடும்பத்துக்கு தகரங்கள், உலர் உணவு பொருட்களை உடனடியாக வழங்கி வைத்த நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் அந்தக் குடும்பத்துக்கு வீடு ஒன்றையும் அமைத்து வழங்க முயற்சி எடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-3)

# ஐஸ், கஞ்சா விற்றவர் துன்னாலையில் கைது!

வடமராட்சி, டிசெ. 09

வடமராட்சி துன்னாலையில் ஐஸ் மற்றும் கஞ்சா போதைப்பொருட்களுடன் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இராணுவத்தினரால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

துன்னாலையில் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடுவதாக இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து குறித்த இடத்துக்கு விரைந்த இராணுவத்தினர் சந்தேகநபரை கைது செய்துள்ளதுடன், அவரிடமிருந்து ஒரு தொகை போதை பொருளையும் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரையும் அவரிடமிருந்து மீட்கப்பட்ட போதைப்பொருட்களையும் நெல்லியடி பொலிஸாரிடம், இராணுவத்தினர் ஒப்படைத்துள்ளனர். இது குறித்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)



# ஈச்சமோட்டை மறவர்குளம் புனரமைப்பு பணி ஆரம்பம்!

யாழ்ப்பாணம், டிசெ. 09

ஈச்சமோட்டை மறவர்குளத்தின் புனரமைப்பு பணிகள் நேற்று புதன்கிழமை யாழ். மாநகர முதல்வர் வி. மணிவண்ணன் தலைமையில் ஆரம்பமானது.

இந்தக் குளத்தை அபிவிருத்தி செய்வதற்கான நிகழ்வை யாழ். மாநகர பிரதி மேயரான து. ஈசன் அடிக்கல் நாட்டி தொடக்கி வைத்தார்.

'தூய நகரம்'திட்டத்துக்கு அமைவாக, தியாகி அறக்கொடை நிறுவனத்தின் வாமதேவன் தியாகேந்திரனின் நிதியுதவியுடன் மறவர்குளத்தின் அபிவிருத்தியும் இடம்பெறவுள்ளது.

நேற்றைய நிகழ்வில், யாழ். மாநகர ஆணையாளர் த. ஜெயசீலன் மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள் அந்தப் பகுதி மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# பட்டம் விடும் சீசன் இம்முறையும் வடமராட்சியில் சோபை இழந்தது!

வடமராட்சி, டிசெ. 09

கொரோனா தொற்று காரணமாக வடமராட்சி பிரதேசத்தில் இம்முறை பட்டம் விடும் சீசன் சோபை இழந்து காணப்படுகிறது.

தமிழ் மக்களின் பண்பாட்டு அம்சங்களில் ஒன்றான பட்டம் விடுதல் நிகழ்வுகள் வருடந்தோறும் ஒக்ரோபர் மாதம் முதல் ஜனவரி மாதம் வரை வடமராட்சி பிரதேசத்தில் காலங் காலமாக நடைபெற்று வருகின்றன.

பட்டம் விடும் இக்காலங்களில் விதம் விதமான வடிவமைப்பிலும், இரவு வேளைகளில் மின் அலங்காரங்களுடனும், விண் கூவும் ஒலியுடனும் பட்டங்கள் வானத்தில் பறக்கும் காட்சியைக் காண அந்தப் பகுதியில் பெருமளவான மக்கள் கூடுவது வழமை.

தவிர, இதன் உச்சநிகழ்வாக உச்ச நிகழ்வு தைப்பொங்கல் தினத்தில் இடம்பெறுவது வழமை. அன்றைய தினம் சமூக நிறுவனங்களால் ஊர்கள் தோறும் பட்டம் விடும் போட்டி இடம்பெறுவதுடன், பிரமாண்டமான போட்டி வல்வெட்டித்துறை கடற்கரை மைதானத்தில் பெரும்விழாவாக நடைபெறுவதுண்டு.

இந்தப் போட்டி 202 - 2021 பருவகாலப் பகுதியில் கொரோனா தொற்று நோய் காரணமாக இரத்து செய்யப்பட்டிருந்தன. இம் முறை இப் போட்டிகள் தொடர்பாக அறிவிப்புக்கள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# கோவிட் - 19 சுகாதார விதிகளை ஆசிரியர்கள் பின்பற்ற வேண்டும்!

## வடக்கு கல்வி அமைச்சு அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 09

கோவிட்-19 நோய்த் தொற்று பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதில் ஆசிரியர்கள் முன்மாதிரியாகச் செயல்படவேண்டும் என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

வடக்கு மாகாண பாடசாலைகளில் ஆசிரியர்கள் சிலர் முகக்கவசம் அணிவது உள்ளிட்ட சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதில்லை என்று முறைப்பாடுகள் கிடைக்கின்றன.

முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணுதல், கைகளை சவக்காரம் இட்டுக் கழுவுதல் அல்லது தொற்று நீக்கியைப் பயன்படுத்தல் போன்ற சுகாதார நடைமுறைகளை உரியவகையில் பேணியவாறு பாடசாலைகளை மீள ஆரம்பிக்க சுகாதார அமைச்சால் கண்டிப்பான அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

எனவே, ஆசிரியர்கள் சுகாதார வழிகாட்டுதல்களை உரியவாறு கடைப்பிடிக்கும் போது தான் மாணவர்களும் அவற்றைப் பின்பற்றுவார்கள். அதற்கான அறிவுறுத்தல்கள் அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

கோவிட்-19 நோய்த்தொற்றின் பரவல் தீவிரமடைந்துள்ளது என்று சுகாதார அமைச்சு அதிகாரிகள் தகவல் வழங்கியுள்ளனர். எனவே, சுகாதார நடைமுறைகளை உரிய வகையில் பின்பற்றுவதன் ஊடாகவே மாணவர்களின் கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயல்பாடுகளை தொடர்ந்து கொண்டு செல்ல முடியும்.

இதேவேளை பொதுப் போக்குவரத்து சேவைகளில் பயணிக்கும் மாணவர்கள் முகக்கவசம் அணிவதை நடத்துநர்கள் கண்காணிக்கவேண்டும். அவை தொடர்பிலும் முறைப்பாடுகள் கிடைக்கின்றன. பாடசாலைகளில் சுகாதார நடைமுறைகள் பின்பற்றுவதனை உறுதி செய்ய கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்" என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



வடக்கு மாகாண கட்டடத் திணைக்களத்தின் பிரதி பணிப்பாளர் எந்திரி சு. சுந்தரகுமாரின் மணிவிழா அண்மையில் இடம்பெற்றது. இதன்போது தம்பதியர் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டபோது...!

# தீவகத்தின் சூரியசக்தி மின் திட்டத்தை இந்தியாவுக்கு வழங்க தீர்மானமில்லை

கொழும்பு, டிசெ. 09

**யாழ்ப்பாணத்தின் தீவகத்தில் முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்ட சூரிய சக்தி மின் உற்பத்தி திட்டங்களை இந்தியாவுக்கு வழங்கும் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.**

நெடுந்தீவு, அனலைத்தீவு, நயினாதீவில் சீனா நிறுவனம் முன்னெடுக்கப்படவிருந்த சூரியசக்தி மின் உற்பத்தி திட்டங்களை கைவிடுவதாக கடந்த 2ஆம் திகதி சீனா அறிவித்திருந்தது.

மூன்றாம் தரப்பிடம் பாதுகாப்பு தொடர்பில் எழுந்த கரிசனையைத் தொடர்ந்து இந்தத் தீர்மானத்தை எடுத்ததாகவும் சீனா குறிப்பிட்டிருந்தது. இது குறித்து நேற்று முன்தினம் அமைச்சரவை இணைபேச்சாளர் ரமேஷ் பத்திரணவிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

வடக்கில் மூன்று தீவுகளில் மேற்கொள்ளப்பட்ட மின் உற்பத்தி திட்டத்தை இந்தியாவின் அதானி நிறுவனத்திடம் அரசாங்கம் வழங்கத் தீர்மானித்துள்ளதா? சேதனை பசளை பிரச்னையால் சீன - இலங்கை உறவில் சிக்கல் எழுந்துள்ளதா என்று எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளித்த அவர்,

"இந்த வேலைத்திட்டத்தை இந்திய நிறுவனத்திற்கு வழங்குவதற்கு எந்தவொரு தீர்மானமும் எடுக்கவில்லை. உரப் பிரச்னை தொடர்பில் இலங்கையிலுள்ள சீன தூதுவர் தெளிவாக நிலைப்பாட்டை அறிவித்துள்ளார். அதன்போது இரு நாடுகளுக்கும் இடையிலான நம்பிக்கை மற்றும் தனிப்பட்ட நட்புறவில் எவ்வித விரிசலும் இல்லை - என்றார்.

மேலும், சேதன பசளை விவகாரம் வர்த்தகத்துடன் தொடர்புடைய பிரச்சினையாகும். இது தொடர்பான வழக்கு விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன. இது குறித்த இரு தரப்பினருக்கு மாத்திரமானதாகும். இதனால் இரு நாடுகளுக்கும் இடையிலான தொடர்பில் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் கூறினார். (ஐ)

# சவால்களை எதிர்கொண்டு நாட்டை கட்டியெழுப்புவோம்

## எரிசக்தி அமைச்சர் அழைப்பு

கொழும்பு, டிசெ. 09

கொரோனா வைரஸ் தொற்று மற்றும் எதிர்க் கட்சி உருவாக்கும் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு நாட்டு மக்களுக்கான அபிவிருத்திப் பணிகளை அரசாங்கம் சிறந்த முறையில் முன்னெடுத்து செல்லும் என்று, எரிசக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில், நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்துரைத்த அவர்,

கொரோனா வைரஸ் எனும் சவால் அதேபோன்று எதிர்க் கட்சி ஏற்படுத்தும் சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுத்து, நாட்டு மக்களுக்கு தேவையான அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதுடன் நாட்டின் பொருளாதாரத்தையும் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களை அரசாங்கம் முன்னெடுக்கும்.

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக உலக பொருளாதாரம் பாதிப்படைந்தது. இலங்கையும் அதனை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது. அதேநேரம் மின் நெருக்கடி காரணமாக, பெரும் மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டது. எனினும் மின் விநியோகம் சீர்செய்யப்பட்டு நுகர்வோர் அதன் பலனை அனுபவித்து வருகின்றனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலையிட்டு தொழிற் சங்கங்களுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்தி தடையில்லா மின்சாரத்தை வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு உரிய தரப்பினருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

நாம் நாட்டை பொறுப்பேற்கும்போது இவ்வாறான ஒரு பெருந்தொற்றுக்கு முகங்கொடுக்க நேரிடும் என்று எதிர்பார்க்கவில்லை. கொரோனா எனும் பெருந்தொற்று காரணமாக உலக நாடுகளே பெரும் பின்னடைவை சந்தித்துள்ளன. எனினும் நாம் அரசாங்கம் என்ற வகையில் அனைத்துச் சவால்களுக்கும் முகங்கொடுத்து நாட்டை வழிநடத்தி செல்கின்றோம். நாட்டில் எழுந்த உரப் பிரச்சினைக்கு தற்போது சுமுகமான தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது - என்றார்.

# பேருவளை படுகொலை சந்தேக நபர் கைது!

கொழும்பு, டிசெ. 09

களுத்துறை பேருவளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில், நபரொருவரை கூரிய ஆயுதமொன்றினால் தாக்கி படுகொலை செய்த குற்றச்சாட்டில் சந்தேக நபரொருவரை களுத்துறை பொலிஸார் நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளனர்.

பேருவளை கடற்பரப்பில் வைத்து, கடந்த 3ஆம் திகதி 24 வயது நபரொருவர் படுகொலை செய்யப்பட்டார். டேல்கிட் தோட்டம் பதுருளிய பிரதேசத்தை சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு கொலையானார்.

இந்த படுகொலை தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வந்த நிலையிலேயே, பொலிஸார் சந்தேக நபர் ஒருவரை கைதுசெய்துள்ளனர்.

மத்துகமை பிரதேசத்தை சேர்ந்த 26 வயது நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# அரியாலையில் குண்டு மீட்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 09

அரியாலை - புங்கன்குளம் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து சிறிய ரக மோட்டார் குண்டொன்று நேற்று மீட்கப்பட்டது.

நேற்றுக் காலை வீட்டு உரிமையாளரால் குப்பைகளை புதைப்பதற்காக கிடங்கு ஒன்றை வெட்டியபோதே குறித்த குண்டு மீட்கப்பட்டது.

இதையடுத்து யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்டது. நீதிமன்ற அனுமதியின் பின்னர் குண்டு மீட்கப்பட்டது. (ஐ)

# தனிமைப்படுத்தல் விதி மீறல் 1,906 பேருக்கு எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 09

மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய ஆயிரத்து 906 பேர் பொலிஸாரினால் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகள் மீறப்படுகின்றதா என்பதை கண்காணிப்பதற்காக 771 பொலிஸார் இணைந்து நேற்று முன்தினம் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது 2 ஆயிரத்து 861 மோட்டார் சைக்கிள்களும் 2 ஆயிரத்து 598 முச்சக்கர வண்டிகளும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் 6 ஆயிரத்து 933 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் தனிமைப்படுத்தல் சட்டவிதி முறைகளை மீறிய ஆயிரத்து 906 பேர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# டிசெ. 4இற்கு முன்னர் விநியோகித்த எரிவாயு சிலிண்டர் மீளப்பெறப்படும்!

## லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 09




டிசெம்பர் 4ஆம் திகதிக்கு முன்னர் விநியோகஸ்தர்கள் மற்றும் வீடுகளில் வழங்கப் பட்ட அனைத்து 'சீல்' செய்யப்பட்ட எரிவாயு சிலிண்டர்களையும் திரும்பப் பெறுமாறு நுகர்வோர் விவகார அதிகாரசபை லிட்ரோ எரிவாயு நிறுவனத்திற்கு அறிவித்துள்ளது.

லிட்ரோ எரிவாயு நிறுவனத்திற்கு எழுத்துமூலம் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நீல நிற முத்திரையுடன்கூடிய பயன்படுத்தப்படாத எரிவாயு சிலிண்டர்கள் திரும்பப் பெறப்படும் என்று அறிவிக் கப்பட்டுள்ளது. (ஐ)

# யாழ். பல்கலையில் சேர் இராமநாதன் குருபூசை!





யாழ்ப்பாணம், டிசெ. 09

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஸ்தாபகத்துக்கு அடித்தளமான பரமேஸ்வரா கல்லூரியின் நிறுவுநரும், சைவப் பெருவள்ளலாருமான சேர் பொன். இராமநாதனின் 91ஆவது குருபூசை நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்றது.

பல்கலைக்கழக வளாகத்தினுள் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் விசேட அபிஷேகம், பூஜையுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. இதைத் தொடர்ந்து பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள சேர் பொன். இராமநாதனின் உருவச் சிலைக்கும், சபா மண்டபத்தினுள் உள்ள உருவப் படத்துக்கும் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்த நிகழ்வில், சேர். பொன் இராமநாதன் அறக்கட்டளை சார்பில் பேராசிரியர் சி. சிற்றம்பலம் மற்றும் முன்னாள் துணைவேந்தரும், பேரவை உறுப்பினருமான பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, பதிவாளர் வி. காண்டீபன், இந்து கற்கைகள் பீடத்தைச் சேர்ந்த முன்னாள் துறைத் தலைவர் பேராசிரியர் எம். வேதநாதன், முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ், பேராசிரியர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ், பீடாதிபதிகள், துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# புதையல் தோண்டிய இருவர் கைது

பதுளை, டிசெ. 09

பதுளை, மஹியங்கனையில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பதுளை, மஹியங்கனை திவுலுபெலஸ்ஸ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ரோட்டலவெல பிரதேசத்தில், புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இருவரை, பொலிஸார் நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளனர்.

மாவனெல்லை, திவுலுபெலஸ்ஸ ஆகிய பிரதேசங்களை சேர்ந்த 32, 44 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது புதையல் தோண்டுவதற்காகப் பயன்படுத்திய பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

# மன்னாரில் ஒமைக்ரோன் தொற்றா?

## பி. சி. ஆர். மாதிரிகள் சோதனைக்காக ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்துக்கு



மன்னார், டிசெ. 09

**மன்னார் மாவட்டம் உள்ளடங்கலாக வடக்கில் ஒமைக்ரோன் திரிபுடையவர்கள் உள்ளார்களா என்பதை கண்டறிய பி.சி.ஆர். மாதிரிகள் பெறப்பட்டு ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்துக்கு பரிசோதனைக்காக அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.**

நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், மன்னார் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை புதிதாக 46 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 29 பேர் திருக்கேதீஸ்வரம் பகுதியில் உள்ள சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்து அயலில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கின்ற மாணவர்களாகவும், பல்கலைக்கழக மாணவர்களாகவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் தங்கியுள்ள விடுதியில் ஒரு பகுதியிலேயே அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகின்றது. இவர்களுடன் சேர்த்து டிசெம்பர் மாதம் 7 நாட்களில் 118 கொரோனா தொற்றாளர்களும், இவ்வருடம் 3 ஆயிரத்து 41 தொற்றாளர்களும், மாவட்டத்தில் தற்போது வரை 3 ஆயிரத்து 58 தொற்றாளர்களும் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மாவட்டத்தில் தற்போது வரை 29 கொரோனா மரணம் நிகழ்ந்துள்ளன.

மன்னார் மாவட்டத்தில் கொரோனா தடுப்பூசி பெற்ற 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான 3ஆவது தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது. எனினும், குறித்த தடுப்பூசியை பெற்றுக் கொள்வதற்கு காட்டப்படுகின்ற ஆர்வம் முதல் இரு தடுப்பூசிகளையும் பெற்றுக் கொள்ளும் போது காட்டப்பட்ட ஆர்வத்தை விட குறைவாகக் காணப்படுகின்றது.

எனவே 60 வயதிற்கு மேற்பட்ட பைசர் மற்றும் சினோபார்ம் ஆகிய தடுப்பூசிகளை பெற்றவர்கள் தமது 3 மாதங்களை பூர்த்தி செய்தவர்கள் தமது 3ஆவது தடுப்பூசியை விரைவாக பெற வேண்டும் - என்றும் கூறினார். (ஐ)



# 138 கிலோ கேரள கஞ்சாவுடன் வவுனியாவில் இருவர் கைது!

வவுனியா, டிசெ. 09

ஓமந்தையில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து முன்னெடுத்த சுற்றிவளைப்பில் 138 கிலோ கிராமிற்கும் அதிக கேரள கஞ்சாவுடன் சந்தேக நபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கேரள கஞ்சாவுடன் கூலர் வாகனம் ஒன்று பயணிப்பதாக கிடைக்கப் பெற்ற தகவலுக்கமையவே இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது குறித்த லொறியிலிருந்து 138 கிலோ 581 கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதோடு, லொறியின் சாரதி மற்றும் உதவியாளர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் 46 மற்றும் 28 வயதுகளையுடைய வெல்லம்பிட்டி மற்றும் கொழும்பு 15 பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.

ஓமந்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

# தான்தோன்றீஸ்வரர் ஆலய உண்டியல் உடைத்து திருட்டு



முல்லைத்தீவு, டிசெ. 09

வரலாற்று சிறப்புமிக்க முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் தான்தோன் றீஸ்வரர் ஆலய உண்டியலை உடைத்து திருட்டு இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு வேளை இடம்பெற்ற இந்தத் திருட்டுக் குறித்து ஆலய நிர்வாகத்தினரால் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து, சம்பவம் குறித்து ஒட்டுசுட்டான் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

# டிப்பர் மோதிய விபத்தில் கிராம சேவகர் படுகாயம்!



வவுனியா, டிசெ. 09

டிப்பர் மோதியதில் மோட்டார் சைக்கிளை மோதியதில் அதில் பயணித்த கிராம சேவையாளர் ஒருவர் படுகாயமடைந்தார்.

வவுனியா மயிலங்குளத்தில் நேற்று புதன்கிழமை காலை 9 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதில், ஆசிகுளம் கிராம சேவகரான பாலசுப்பிரமணியம் ஜனகன் என்பவரே படுகாயமடைந்தார்.

இந்த சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

காயமடைந்தவர் பண்டாரிகுளத்திலுள்ள தனது வீட்டில் இருந்து ஆசிகுளத்திலுள்ள தனது அலுவலகத்துக்கு கடமைக்கு சென்றுகொண்டிருந்தார்.

மயிலங்குளம் சந்திக்கு அண்மித்த பகுதியில் உள்ள ஒழுங்கையில் இருந்து எதுவித சமிக்ஞைகளுமின்றி பிரதான வீதிக்கு கிரவல் ஏற்றி கொண்டு வந்த டிப்பர் வாகனம் கட்டுப்பாட்டை இழந்து, கிராம சேவகர் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள்மீது மோதி விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர் வவுனியா பொது மருத்துவமனையில் சேரக்கப்பட்டுள்ளார்.

விபத்துக் குறித்து பொலிஸார் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## சிவகரனிடம் ரி.ஐ.டி விசாரணை

மன்னார், டிசெ. 09

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி. எஸ். சிவகரனிடம் சுமார் இரண்டரை மணி நேரம் பயங்கரவாத தடை பொலிஸாரால் வாக்கு மூலம் பெறப்பட்டுள்ளது.

வவுனியாவை சேர்ந்த பயங்கரவாத தடை விசாரணை பிரிவினரால் மன்னாரிலுள்ள அலுவலகத்திற்கு நேற்றுமுன்தினம் சென்று வாக்குமூலத்தை பெற்றுள்ளனர்.

மாவீரர் தின நிகழ்வுகள், சிவில் சமூக செயல்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் அவரிடம் பயங்கரவாத விசாரணை பிரிவினர் வாக்குமூலம் பெற்றுக் கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# டெங்கு நோய் தாக்கம் மன்னாரில் அதிகரிப்பு!

மன்னார், டிசெ. 09

மன்னாரில் தற்போது டெங்கு நோயின் தாக்கமும் அதிகரித்துள்ளது. இதுவரை 83 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி. வினோதன் தெரிவித்தார்.

சுகாதார சேவைகள் திணைக்களத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரித்தார்.

மேலும், மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பனங்கட்டுகொட்டு, பெரிய கடை, சின்னக்கடை, மூர்வீதி, மற்றும் பேசாலை பகுதிகளில் அதிக அளவில் டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தற்போது வரை மன்னார் மாவட்டத்தில் 83 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் நவம்பர் மாதம் 26 டெங்கு நோயாளர்களும் டிசெம்பர் மாதம் 7 நாட்களில் 27 டெங்கு தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நுளம்பு பெருகக் கூடிய இடங்களை அடையாளம் கண்டு, அழிப்பது, அகற்றுவது அல்லது சுத்திகரிப்பது மற்றும் நுளம்பின் தாக்கத்தில் இருந்து மக்கள் தங்களை பாதுகாப்பது கட்டாயமானதாகும் என்றும் அவர் சொன்னார். (ஐ)

# பூநகரியில் இலவச மருத்துவ முகாம்

கிளிநொச்சி, டிசெ. 08

வட மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களமும், கிளிநொச்சி மாவட்ட செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்த இலவச மருத்துவ முகாம் கடந்த செவ்வாய்க்கிழமை பூநகரியில் இடம்பெற்றது.

வாடியடி புனித மரியன்னை ஆலயத்தில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில், வட மாகாண ஆளுநரின் ஆலோசனைக்கு அமைவாக மத வழிபாட்டுத் தலங்களில் கடமை புரியும் மதகுருமார்கள், மற்றும் ஊழியர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த நடமாடும் சேவையில் பொதுமக்களும் கலந்துகொண்டு சிகிச்சைகளையும், மருத்துவ ஆலோசனையையும் பெற்றனர். (ஐ)





# புலம்பெயர் தமிழர்களின் அரசியலும் உள்நாட்டு அரசியல் தாக்கங்களும்

கலாநிதி அமீரலி



அண்மையில் அமெரிக்காவின் அழைப்பில் மஹிந்தவின் ஆசீர்வாதத்துடன் சென்ற தமிழ்த் தலைவர்களை கனடாவில் வாழும் புலம்பெயர் தமிழர் கும்பலொன்று புலிக்கொடி தூக்கி ஆர்ப்பாட்டம் புரிந்து அத்தலைவர்களை ரொறன்ரோ நகரில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் பேசவிடாமல் வெளியேற்றியதை செய்திகள் வெளிப்படுத்தின. புலம்பெயர் தமிழருக்குள் இப்படிப்பட்ட மக்கள் மேலுள்ள உலக அனுதாபம் சிதறடிக்கப்படலாம் என்பதையும் இங்கே கவனத்திற் கொள்ளுதல் அவசியம்.

ஈழத்தமிழர் பிரச்னைகளுக்கு அரசியல் அடிப்படையில் ஒரு சுமுகமான தீர்வு காண்பதற்காகப் புலம்பெயர் தமிழர்கள் ஆற்றும் சேவை மகத்தான தொன்று. அதைப்பற்றி இக்கட்டுரையாளர் இதற்கு முன்னரும் கருத்துக்களை 'ஈழநாடு' பத்திரிகையில் வெளியிட்டுள்ளார்.

புலம்பெயர் தமிழரின் தொடர்ந்தேற்சியான உலகளாவிய அழுத்தங்கள்தான் இன்று ராஜபக்ஷ அரசை நெருக்கடிக்குள்ளாக்கி இருக்கிறது. தோற்றுப்போன விடுதலைப் புலிகளின் விரக்தியடைந்த எச்சங்களே புலம்பெயர் தமிழர் என்று எள்ளிநகையாடிய காலம்போய் அவர்களை ஒரு பொருட்டாக மதித்து பேச்சு நடத்த விரும்பிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை அந்த நிலைக்கு மாற்றியது புலம்பெயர் தமிழரின் அழுத்தங்களே என்றால் அது மிகையாகாது. அந்தத் தமிழினம் சாதிக்க வேண்டியவை இன்னும் எவ்வளவோ உண்டு. இன்று புலம்பெயர் முஸ்லிம் இனமொன்றும் உருவாகியுள்ளமை இலங்கை அரசுக்கு மேலும் ஒரு தலையிடியைக் கொடுத்துள்ளது. எனவேதான் அந்த இனத்தின் ஒரு குழுவையும் தமிழ் தலைவர்கள் ரொறன்ரோவில் சந்தித்துள்ளனர்.

இவ்வாறான ஒரு சாதகமான சூழல் வளர்ந்துவரும் நிலையில் புலிக்கொடியுடன் மேற்கு நாடுகளில் ஆர்ப்பாட்டம் செய்வோரின் செயல்கள் வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந்த கதைபோல தமிழர் பிரச்னையை மாற்றி விடுமோ என்று ஐயமுற வைக்கின்றது.

முதலில் ஒன்றை இவ் ஆர்ப்பாட்டக்காரர் உணரவேண்டும். விடுதலைப் புலிகள் வெறும் பயங்கரவாதிகளே என்ற சர்வ தேச அரங்கில் குத்தப்பட்டுள்ள அடையாளம் இன்னும் அழிக்கப்படவில்லை. அது இப்போது அழியாதென்பதை ஐரோப்பிய ஒன்றியம் சில நாட்களுக்குமுன் அறிவித்துள்ளது. இரண்டாவதாக, புலிகளின் அன்றைய தலைமைத்துவம் புத்திசாலிகளாகவும் அரசியல் சாணக்கியர்களாகவும் இருந்திருப்பின் இலங்கைத் தமிழினத்தின் இன்றைய நிலை பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்ற அளவுக்குத் தள்ளப்பட்டிருக்காது என்பதையும் இப்போது புலிக்கொடி தூக்கும் வீரர்கள் அறிய வேண்டும்.

கிரிக்கெட் விளையாட்டில் முதலில் துடுப்பெடுத்தாடும் அணி ஏராளமான ஓட்டங்களைக் குவித்தபின்பு எல்லாத் துடுப்புகளையும் இழக்காமலேயே எதிரணியினை ஆடச் சொல்வதுபோன்ற சந்தர்ப்பங்கள் புலிகளுக்கிருந்தன. இலங்கை அரசு பலவீனமடைந்து இந்தியாவின் தயவை நாடிப் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்குச் சம்மதித்தபோது அந்தச் சந்தர்ப்பத்தைச் சாதுரியமாகப் பயன்படுத்தத் தவறி விடாப்பிடியாக எல்லாத் தீர்வுகளையும் நிராகரித்த தலைமைத்துவத்தின் அறிவீனத்தை என்னவென்பதோ!

**“ புலம்பெயர் தமிழரின் முயற்சிகள் பூரண பலன் தரவேண்டுமாயின் உள்நாட்டுத் தமிழர்கள் ஒரே குடையின்கீழ் திரண்டு ஒரே குரலில் பேசவேண்டும். அவ்வாறான குடையின்கீழ் மலையகத் தமிழரும் முஸ்லிம்களும் நிழல் காய வேண்டும்.**

தமிழ்நாடும் இந்தியாவும் கடைசி வரையும் தங்களைக் கைவிடாது என்ற தப்புக்கணக்கின் விளைவே அந்த இறுமாப்பும் அதனால் ஏற்பட்ட இறுதிப் படு தோல்வியும். அவற்றையெல்லாம் இங்கே ஆராயாமல் வரலாறு விமர்சிக்கட்டும் என்று தள்ளிவைத்து இப்போதுள்ள நிலமையை இன்னும் சிறிது விளக்குவோம்.

இலங்கையின் பொருளாதாரம் என்றுமில்லாதவாறு சீரழிந்துள்ளது. ஈழத்து உணவு இந்தியரின் பசியைத் தீர்த்த காலம் மாறி இன்று இந்தியாவின் உணவுக்காக கையேந்துகிற ஒரு நாடாக இலங்கை மாறியுள்ளதை அதன் வரலாற்று விதியென்பதா இந்த ஆட்சியை நிறுவிய மக்களுக்கான தண்டனை என்பதா? இல்லையெனில் உலக வரலாற்றிலே எங்கேயாவது ஒரு நிதி அமைச்சர் அதுவும் அவருடைய கன்னிப் பாதீடு பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில் அவசர அவசரமாக அண்டை நாடொன்றுக்குக் கடன் கேட்டுச் சென்றதுண்டா?

இருக்கின்ற அன்னியச் செலாவணி மூன்று வார இறக்குமதிகளுக்கு மட்டும் போதுமானதாக இருக்கின்றது. குடும்பங்களின் நாளாந்த வருமானம் சந்தையில் காய்கறி வாங்குவதற்கும் கூடக் காணாது. கஷ்டப்பட்டு ஒன்றிரண்டை வாங்கி வந்தாலும் அவற்றை சமைப்பதற்கு கூட்டுச் சரக்குமில்லை. அவை இருந்தாலும் அடுப்புமூட்ட விறகுமில்லை வேறு எரிபொருள்களும் இல்லை. மக்களின் அடிவயிறு பற்றுகிறது. பிள்ளைகளின் பசியை ஆற்ற முடியாத தாய்மார்கள் தமது பிள்ளைகளுடன் வெறும் சட்டி பானை சகிதம் வீதியிலிறங்கி ஆர்ப்பாட்டம் செய்யும் நாள் வெகு தூரத்தில் இல்லை. அந்த ஆர்ப்பாட்டம் தொழிற் சங்கங்களின் ஆர்ப்பாட்டங்களை விடவும் வலுவுள்ளதாக அமையும் என்பதை அரசாங்கம் உணரவேண்டும்.

இவ்வாறான ஒரு நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ள ராஜபக்ஷ ஆட்சி வெளிநாடுகளின் அழுத்தங்களைச் சமாளிக்க முடியாமல் தவிக்கிறது. ஒரு ராஜபக்ஷ இந்தியாவின் உதவியை நாடிப் பறக்க இன்னொரு ராஜபக்ஷ அரபுநாட்டு ஸ்தானிகர்களிடம் பண உதவி கேட்டு மன்றாடுகின்றார். மூன்றாமவர் துபாய்க்குப் பறந்துள்ளார் அதே உதவியை நாடி. அவர்கள் உதவி கேட்கும் நாடுகள் எல்லாமே மேற்கு வல்லரசுகளின் நண்பர்கள். ஆதலால் அவ்வல்லரசுகளின் இலங்கையைப் பற்றிய அழுத்தங்களுக்கு அவை செவிசாய்ப்பதை தவிர்க்க முடியாது. புலம்பெயர் தமிழர்கள் மேற்கு நாடுகளுக்கு அழுத்தம் கொடுக்க அந்த நாடுகள் அவற்றின் நட்பு நாடுகளுக்கு அழுத்தம் கொடுக்கும் ஒரு வாய்ப்பான நிலைமை உருவாகியுள்ளது.

சரியோ பிழையோ இந்தியாவும் மேற்கு நாடுகளும் இலங்கைத் தமிழரின் பிரதிநிதிகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தேர்ந்துள்ளனர். அதனாலேதான் அவர்களை அழைத்து தமிழினத்தின் பிரச்னைகளைப் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்துகின்றனர். நமக்குள்ளே கூட்டமைப்பை பற்றியும் அதன் தலைமத்துவத்தைப் பற்றியும் ஆயிரம் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். அது இயல்பு. அவ்வேறுபாடுகளை நாமே கூடிப் பேசித் தீர்க்காமல் உலகமே கைகொட்டிச் சிரிக்கும்படி அதன் தலைவர்களுக்கு அன்னிய நாடுகளில் புலிக்கொடி தாங்கி ஆர்ப்பாட்டம் செய்வது புத்திசாலித்தனமல்ல. புலிக்கொடியே அந்நாடுகளின் அங்கீகாரத்தைப் பெறாத நிலையில் அதனைத் தூக்கிப்பிடித்துக்கொண்டு வீதிகளில் கூத்தாடுவதை அங்கீகரிக்க முடியாது.

புலம்பெயர் தமிழரின் முயற்சிகள் பூரண பலன் தரவேண்டுமாயின் உள்நாட்டுத் தமிழர்கள் ஒரே குடையின் கீழ் திரண்டு ஒரே குரலில் பேசவேண்டும். அவ்வாறான குடையின்கீழ் மலையகத் தமிழரும் முஸ்லிம்களும் நிழல் காய வேண்டும். அதைவிடுத்து நமக்குள்ளேயே எட்டப்பர்களை வளர்த்துக்கொண்டு தமிழினத்தின் தலைமைப் பீடத்தை கைப்பற்ற வேண்டும் என்ற ஒரே ஆசையால் அந்த எட்டப்பர்களைத் தூண்டிவிட்டு பிளவுற்று நிற்பது நம்மை நாமே காட்டிக்கொடுப்பது போல் இல்லையா? நிலைதடுமாறி நிற்கும் ராஜபக்ஷ அரசுக்கு இதைவிட வேறென்ன பரிசு வேண்டும்?

**கட்டுரையாளர்:**
**மேர்டொக் பல்கலைக்கழகம், மேற்கு அவுஸ்திரேலியா.**

■



# இடைநிறுத்தப்பட்ட சீனாவின் மின்சார உற்பத்தி நிர்மாணம்

**நா.யோகேந்திரநாதன்!**

> **இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சீனாவின் சக்தியைப் பலவீனப்படுத்துவதில் இந்தியா, ஜப்பான், அவுஸ்திரேலியா, அமெரிக்க உட்பட மேற்கு நாடுகள் தீவிரமாகச் செயற்பட்டு வருவது வெளிப்படையானது.**

இலங்கையின் வடபகுதியில் நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு ஆகிய இடங்களில் சீனாவால் உருவாக்கப்படவிருந்த காற்று, கடல லைகள் என்பவற்றின் மூலம் மின்சாரம் பெறும் வேலைத்திட்டம் மேற்கொள் வதற்கான இணக்கப்பாடு இலங்கைக்கும் சீனாவுக்குமிடையே எட்டப்பட்டிருந்தது.

ஆனால் அண்மையில் இலங்கைக் கான சீனத் தூதுவர் வெளியிட்டுள்ள தனது “ருவிட்டர்” பக்கத்தில் மேற்படி நிர்மாணத் திட்டத்தைத் தாம் இடை நிறுத்துவதாகவும் அத்திட்டத்தை மாலைதீவிலுள்ள 12 தீவுகளில் மேற் கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட் டிருந்தது. மேலும் அதில் மூன்றாவது தரப்பு ஒன்றின் தலையீடு காரணமாகவே தாம் இந்த முடிவுக்கு வரவேண்டியிருந்த தாகவும் அதில் தெரிவிக்கப்பட்டிருந் தது. இலங்கையின் நிதியமைச்சர் இந்திய விஜயமொன்றை மேற்கொண்டு அங்கு பல தரப்பினரோடும் பேச்சுகளை நடத் தியுள்ள சந்தர்ப்பத்திலேயே சீனாவின் இந்த அறிவிப்பு வெளியாகியிருந்தது.

பஸில் ராஜபக்ஷ இந்தியாவின் பரஸ்பர ஒத்துழைப்பை மேம்படுத்துவது தொடர்பாகவும், இந்திய முதலீடுகளை இலங்கையில் அதிகரிப்பது தொடர் பாகவும் பேச்சுகளை அங்கு நடத்தி யிருந்தார். அவர் வெளிவிவகார அமைச் சர் நிர்மலா சீதாராமனுடன் நடத்திய சந்திப்பு மிக முக்கியமான சந்திப்பாகக் கருதப்படுகிறது. அதில் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இலங்கையின் முக்கியத்துவம் குறித்தும் அதன் பாதுகாப்புத் தொடர்பாக இலங்கை - இந்தியா இணைந்து செயல்படுவது பற்றிப் பேசப்பட்டதாகவும் சில செய்திகள் வெளி வந்துள்ளன.

இப்படியான ஒரு சூழலில் சீனா குறிப்பிட்ட மூன்றாவது தரப்பு என்பது இந்தியாவாகவே இருக்கக் கூடும் என்ற கருத்தும் நிலவி வருகிறது.

எப்படியிருந்த போதிலும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சீனாவின் சக்தியைப் பலவீனப்படுத்துவதில் இந்தியா, ஜப்பான், அவுஸ்திரேலியா, அமெரிக்க உட்பட மேற்கு நாடுகள் தீவிர மாகச் செயற்பட்டு வருவது வெளிப் படையானது.

ஆனால் நீண்ட காலமாகவே இலங் கையுடன் நல்லுறவைப் பேணி வந்த சீனா முன்னறிவித்தல் எதுவுமின்றி இப்படியான ஒரு முடிவுக்கு வந்திருப்பது பலருக்கும் அதிர்ச்சியளித்திருக்கும்.

அதேவேளை கடந்த இரு மாதங்க ளின் முன்பு, சீனாவிலிருந்து கொண்டு வரப்பட்ட சேதனப் பசளை தீங்கு விளைவிக்கும் நுண்ணுயிரிகளைக் கொண்டுள்ளதெனக் கூறப்பட்டு நிரா கரிக்கப்பட்டுத் திருப்பி அனுப்பப் பட்டதும், அக்கப்பல் திரும்பவும் வந்து 2 மாதங்களாக இலங்கைக் கடற்பரப்பில் தரித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. அந்த உற்பத்தி நிறுவனம் மேற்படி யான பசளை மூன்றாவது தரப்பால் பரிசீலிக்கப்பட வேண்டுமென முன் வைத்த கோரிக்கையை இலங்கை அதிகாரிகள் ஏற்க மறுக்கின்றனர். மேற்படி பசளையை ஏற்க மறுத்தால் 80 கோடி டொலர் நஷ்ட ஈடாகவும் தாமதக் கட்டணமாகவும் கட்ட வேண்டி வரும் என அந்நிறுவனம் எச்சரித்துள்ளது.

எப்படியிருந்தபோதிலும் சீனாவுக்கும் இலங்கைக்குமான நீண்ட கால நல்லுற வில் விரிசல் ஏற்படுவதற்கான அறிகுறி யாகவே இவ்விரு சம்பவங்களும் நோக் கப்படுகின்றன.

அமெரிக்கப் பிரஜையான பஸில் ராஜபக்ஷ நிதி அமைச்சராகப் பொறுப் பேற்க தயாரிப்பு முயற்சிகள் இடம் பெற்ற காலத்திலேயே இலங்கையின் போக்கில் சில மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. குறிப்பாக அமெரிக்கா இந்தியாவுடனான இதுவரைக் கையாண்டு வந்த உறவு இன்னொரு கட்டத்தை நோக்கி நகர ஆரம்பித்தது.

அதன் முதற்கட்ட நடவடிக்கை கெரவலப்பிடிய மின் நிலையத்தின் 40 வீதப் பங்குகள் அமெரிக்க நிறுவனத் துக்கு வழங்கப்பட்டதுடன், இலங்கை யின் எரிவாயு விநியோகம் முழுமை யாகவே அமெரிக்காவுக்கு வழங்கப் பட்டது. இதன்மூலம் இலங்கையின் மின்சார விநியோகம், எரிவாயு விநி யோகம் என்பன அமெரிக்காவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படு வதற்கான வாய்ப்புகளுக்கு அடித்தள மிடப்படுகிறது.

இன்னொருபுறம் திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் அமெரிக்காவுக்கு வழங்கப்படவுள்ளன. இதன்மூலம் அமெ ரிக்க போர்க் கப்பல்கள், வர்த்தகக் கப் பல்கள் அங்கு தாராளமாக வந்து போக முடியும். அதன் பாதுகாப்புக்கு என அமெரிக்கப் படையணி அங்கு நிறுத் தப்படும் சாத்தியமும் உண்டு.

இந்த நிலையில் இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் கேந்திர நிலையமாக விளங்கும் திருகோணமலைத் துறை முகம் அமெரிக்காவின் கட்டுப்பாட்டில். கொண்டு வரப்படும் அபாயம் உண்டு.

இந்த நிலையில் சீனா மின்னுற்பத்தி நிர்மாணத் திட்டத்தை மாலைதீவுக்கு மாற்றியமை ஒரு பின்வாங்கலாக இருக் கக்கூடுமோ எனச் சிலர் சந்தேகப்பட லாம். நிச்சயமாக இல்லை! சீனா இலங் கையில் மேலும் வலுவாகக் காலூன்ற இலங்கைக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கையாகும். கடந்த காலங்களில் போர் காலத்திலும் போருக்குப் பிந்திய காலங்களிலும் இலங்கைக்கு நிபந்த னையற்ற முறையில் ஆதரவையும் உதவி யையும் வழங்கி வந்த சீனா மின்னுற்பத்தி நிலையம், சேதனப் பசளை என்பன மூலம் இலங்கையை இறுக்கிப் பிடிக்க வுள்ள விடயத்தை வெளிப்படுத்தியுள் ளது.

அம்பாந்தோட்டைத் துறைமுகம் 99 வருடங்கள் சீனாவுக்கே குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. குறைந்தபட்சம் அது தொடர்பான கடன் கட்டிமுடிக்க வேண்டிய 70 வருடங்களுக்கு அது சீனாவின் கட்டுப்பாட்டிலேயே இருக் கும். கொழும்புத்துறைமுக நகரத்தில் மேற்கு நாடுகள் எவ்வளவு தான் முதலீடு செய்தாலும், அதன் 99 வருடங்களுக்கு சீனாவின் கையிலேயே இருக்கும். தற் சமயம் துறைமுகத்திலிருந்து களனிப் பாலம் வரை தூண்களுக்கு மேல் அமைக் கப்படும் அதிவேக நெடுஞ்சாலையின் பராமரிப்பு, வரி அறவீடு என்பன, 14 வருடங்களுக்குச் சீனாவின் பொறுப் பிலேயே இருக்கும்.

எனவே, சீனா இலங்கையில் ஏற்க னவே வலுவாகக் காலூன்றி விட்ட நிலையில் அது பின்வாங்கும் என்ற பேச்சுக்கே இடமில்லை.

அதேவேளையில் இலங்கையின் தென் பகுதியும் மேற்குப் பகுதியும் சீனாவுக்கும், கிழக்குப் பகுதி அமெரிக் காவுக்கும் பங்கு போடப்படுகிறதா என்ற கேள்வி எழுகிறது. தற்சமயம் இலங்கையை மையமாகக் கொண்டு முன்னெடுக்கப் படும் வல்லரசுகளுக்கிடையேயான அரசியல், பொருளாதாரப் போட்டி எதிர்காலத்தில் இராணுவப் போட்டியாக விரிவடையாது என்று சொல்லி விடமுடியாது. இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் காரணமாக சீனா, அமெரிக்கா ஆகிய இரு தரப்பி னரும் இலங்கையைத் தங்கள் கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவர சகல பொரு ளாதார, அரசியல், இராணுவத் தந்தி ரோபாயங்களையும் கையாள்வது தவிர்க்கமுடியாது.

எனவே இலங்கைக்கு மட்டுமின்றி மூன்றாம் உலக நாடுகளுக்கு நடுநிலைக் கொள்கையே பொருத்தமானதாகும். ஆனால் இலங்கை ஒரு சந்தர்ப்பத்தில் முற்றுமுழுதாக சீனா பக்கமும் இன் னொரு சந்தர்ப்பத்தில் மேற்குலகம் பக்கம் சாய்வதுமாக தனது நடவடிக் கைகளை நகர்த்தி வருகிறது. இரு தரப் பினரிடமும் நம்பிக்கை இழக்கும் நிலையை ஏற்படுத்திவிடும். இதன் விளைவு ஏதோ வொரு தரப்பினர் தங்கள் பலம் மூலம் இலங்கையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் நிலையையே உருவாக்கும்.

இதன் காரணமாக நாட்டில் பொருட் களுக்குத் தட்டுப்பாடு, விலைவாசி உயர்வு, வாழ்க்கைச் செலவு உயர்வு என் பன திட்டமிட்டு உருவாக்கப்படும். இந்த நிலையை மீண்டும் மீண்டும் வெளிநாடுகளிடம் சரணடையும் நிலையே ஏற்படும். எனவே, இன்றைய நிலைமை இப்போதைய ஆட்சியாளர் களின் தூர திருஷ்டி இல்லாமல் மேற்கொள்ளப் பட்ட நடவடிக்கைகள் காரணமாக ஏற்பட்டவை என்பதை மறுத்துவிட முடியாது.

அதுமட்டுமின்றி இலங்கை அரசின் தற்சமயம் மேற்கொள்ளப்படும் நட வடிக்கைகள் மீண்டும் மீண்டும் வல்லரசு நாடுகளுக்குள் கழுத்தைக் கொடுக்கும் ஆபத்தான நிலைமையை நோக்கி நகர் வதை அவதானிக்க முடிகின்றது.

- நன்றி: அருவி

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - I
நேரம் : 1 மணித்தியாலம்

கல்வி tv CHANNEL

40) 
இச் செயற்பாட்டின் போது நல்ல முட்டை மிதப்பதை அவதானிக்கலாம் எனின் இக்குவளையிலுள்ள நீர் யாது?
1) சாதாரணநீர் 2) வெந்நீர் 3) உப்புநீர்

41) கல்லீரல் அழற்சி ஏற்படுவதற்கான காரணம் யாது?
1) அதிக உறைப்பான உணவுகளை உண்ணல்.
2) அசுத்த நீரைப் பருகுதல்
3) எண்ணெயில் பொரித்த உணவுகளை அதிகம் உண்ணல்.

42) இலங்கைக்கே உரித்தான முலையூட்டிகளானவை.
1) சுண்டெலி, மரநாய் 2) புலத்ஹய்யா, மள்புளுட்டா
3) கொம்பு ஓணான், சபன் கோழி

43) வீட்டில் தனிப்பட்ட வகையில் பயன்படுத்தக் கூடிய பொருட்களாவன.
1) துவாய், பற்றூரிகை 2) மின்னழுத்தி, கதிரை 3) அடுப்பு, தும்புத்தடி

44) நிலக்கரி பயன்படுத்தப்படுவது?
1) நீர் மின் உற்பத்தி 2) அனல் மின் உற்பத்தி 3) எரிவாயு அடுப்பு


45) பசியின்மை, உதடுகளின் இணைப்பு ஓரங்களில் வெடிப்புகள் தோன்றுதல், வயிற்றில் எரிச்சல் போன்ற நோய்கள் ஏற்படுவதற்கு எப்போசாக்கு குறைபாடு காரணமாகும்?
1) விற்றமின் A 2) விற்றமின் D 3) விற்றமின் B

46) மின்னல் தாக்கம் ஏற்படக்கூடிய சந்தர்ப்பமாகக் கருதக்கூடியது?
1) மகிழுந்தினுள் அமர்ந்தவாறு பயணம் செய்தல்.
2) திறந்த வெளியில் நிற்றல்.
3) வீட்டினுள் கதிரை மீது அமர்ந்திருத்தல்.

47) வெந்நீர் கேத்தல் புரண்டதால் ஏற்பட்ட எரிகாயத்திற்கு அளிக்கக்கூடிய முதலுதவி யாது?
1) பற்பசைக் களிம்பு பூசுதல்
2) காயம் ஏற்பட்ட இடத்தில் எண்ணெய் பூசுதல்
3) காயம் ஏற்பட்ட இடத்தில் தண்ணீரை வழிந்தோடுமாறு ஊற்றுதல்

48) வித்துக்களை நடுவதற்கு முன் நீரில் ஊற வைப்பதற்கான காரணம் யாது?
1) வித்திலுள்ள அழுக்குகளைக் கழுவுவதற்கு.
2) வித்து முளைத்தலை விரைவுபடுத்துவதற்கு.
3) ஊற வைத்தால் மாத்திரமே வித்துக்கள் முளைக்கும் என்பதால்.

49) பெருந்தெரு, அதிவேகப்பாதை என்பவற்றை தேசப்படத்தில் குறிப்பதற்குப் பயன்படும் நிறங்கள் முறையே.
1) சிவப்பு, நீலம் 2) கறுப்பு, சிவப்பு 3) சிவப்பு, ஊதா

50) 
இம் மின்காந்தத்தின் காந்தத் தன்மையை அதிகரிக்க யாது செய்யவேண்டும்?
1) ஆணிகளை அதிகரித்தல்.
2) மின்கலங்களைக் அதிகரித்தல்.
3) கம்பிச்சுருள்களைக் குறைத்தல்.

51) சிறுவர்களுக்கெதிரான வன்முறைகள் ஏற்படும் போது அழைக்க வேண்டிய அவசரத் தொலைபேசி இலக்கம் யாது?
1) 1990 2) 1959 3) 1929


51) சிறுவர்களுக்கெதிரான வன்முறைகள் ஏற்படும் போது அழைக்க வேண்டிய அவசரத் தொலைபேசி இலக்கம் யாது?
1) 1990 2) 1959 3) 1929

52) 
அருகிலுள்ள படத்தில் காட்டியவாறு பாத்திரத்தில் உப்பு நீர் இட்டு சூரிய ஒளி உள்ள இடத்தில் வைக்கப்பட்டுள்ளது. நாளின் இறுதியில் அவதானிக்கக்கூடியது யாது?
1) பாத்திரத்தில் நீர் காணப்படும்
2) பாத்திரத்தில் நீர் வற்றி உப்புப்படிந்து காணப்படும்
3) பாத்திரம் வெடித்துக் காணப்படும்

53) 
உபகரணம் ஒன்றைப் பயன்படுத்தி மரமொன்றைப் பார்த்த போது இவ்வாறு காணப்பட்டது. எனின் நான் பார்க்கப் பயன்படுத்திய உபகரணம் எது?
1) நுணுக்குக்காட்டி 2) ஊசித்துளைக் கமரா 3) டிஜிற்றல் கமரா

54) ஆதிகாலத்தில் பயன்படுத்தப்பட்ட நீரைச் சுத்திகரிக்கும் முறை யாது?
1) கரியை நீரிலிடல். 2) குளோரினிடல்.
3) வடிகட்டியைப்பயன்படுத்தல்.(filter)

55) சூழல் மாற்றத்தை அறிவிக்கக் கூடிய பிராணி
1) தேனீ 2) ஈசல் 3) வெளவால்

56) 
இச் செயற்பாட்டின் போது மாதிரிகளின் அருகே காந்தத்துண்டுகளைச் செலுத்தும் போது யாது நிகழும்?
1) மாதிரிகள் கீழே விழும்
2) காந்தம் மாதிரிகளைத் தள்ளும்
3) மாதிரிகள் அசையும்

57) 
இவ்வாறான இலையமைப்பைக் கொண்ட தாவரமாகக் கருதக்கூடியது
1) புளி 2) ஈரப்பலா 3) சோளம்

## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 40) 03 | 45) 03 | 50) 02 | 55) 02 |
| 41) 02 | 46) 02 | 51) 03 | 56) 03 |
| 42) 01 | 47) 03 | 52) 02 | 57) 01 |
| 43) 01 | 48) 02 | 53) 02 | |
| 44) 02 | 49) 03 | 54) 01 | |

# 'ஒமைக்ரோன்' மாறுபாட்டில் இதுவரை 32 பிறழ்வுகள் பதிவு!

## இதுவரை இறப்புகள் எதுவும் பதிவாகவில்லை என்று கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் தெரிவிப்பு



ஒமைக்ரோன் மாறுபாட்டின் சுமார் 32 பிறழ்வுகள் இது வரை பதிவாகியுள்ளன எனவும், இதுவரை இறப்புகள் எதுவும் பதிவாகவில்லை எனவும் கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஒமைக்ரோன் மாறுபாடு 32 பிறழ்வுகளைக் கொண்டுள்ளது எனவும், டெல்டா மாறுபாடு 23 மற்றும் அல்பா மாறுபாடு 8 பிறழ்வுகளைக் கொண்டுள்ளது எனவும் மருத்துவர் ஜூட் ஜய மஹா தெரிவித்தார்.

இதன் விளைவாக, ஒமைக்ரோன் மாறுபாடு கடுமையான ஆபத்தை ஏற்படுத்தக்கூடும் என்று உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது எனக் குறிப்பிட்ட வைத்தியர், அதே நேரத்தில் மற்றக் காரணிகளும் உள்ளன எனவும் கூறினார்.

ஒமைக்ரோன் மாறுபாட்டுக்கு பூஸ்டர் டோஸ் பதிலளிக்கவில்லை எனச் சமூக ஊடகங்களில் பொய்யான தகவல் பரப்பப்படுகின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஒமைக்ரோன் மாறுபாட்டின் வீரியம் காரணமாக கொரோனா தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வது பயனற்றது என்ற கூற்றை மறுப்பதாகவும் அவர் கூறினார்.

ஒருவரின் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்க அல்லது அன்டிபாடிகளை உருவாக்க தடுப்பூசிகளில் ஸ்பைக் புரதம் சேர்க்கப்பட்டுள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (இ)

# சபையில் இடம்பெற்ற சம்பவங்கள்: விசாரணைக்கு 11 பேரடங்கிய குழு

## சபாநாயகரால் நேற்று அறிவிப்பு



கொழும்பு, டிசெ. 09

**பாராளுமன்றத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் ஆராய்வதற்கும், பரிந்துரைகளை முன்வைப்பதற்கும் பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தலைமையில் விசேட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.**

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நேற்று இந்த அறிவிப்பை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற சம்பவங்களுக்கான காரணங்களைக் கண்டறிவதற்கும், எதிர்காலத்தில் அவ்வாறான சம்பவங்கள் இடம் பெறாமல் இருப்பதற்கான பரிந்துரைகளை முன்வைப்பதற் குமே இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

குழுவில் இடம்பெற்றுள்ள எம்.பிக்களின் விபரம் வருமாறு:-

சமல் ராஜபக்ஷ, பந்துல குணவர்த்தன, வாசுதேவ நாணயக்கார, சுசில் பிரேமஜயந்த, கயந்த கருணாதிலக, ரவூப் ஹக்கீம், அநுரபிரியதர்சன யாப்பா, விஜித ஹேரத், ரஞ்சித் மத்தும பண்டார, எம். ஏ. சுமந்திரன்.

தமது கட்சி உறுப்பினரான மனுஷ நாணயக்கார மீது தாக்குதல் நடத்துவதற்கு முற்பட்ட ஆளுங்கட்சியினர் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், எதிரணி பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்துமாறு வலியுறுத்தியும் ஐக்கிய மக்கள் சக்தியினர் கடந்த இரு நாட்கள் (திங்கள், செவ்வாய்) சபை அமர்வைப் புறக்கணித்திருந்தனர்.

சபாநாயகரிடமிருந்து உரிய பதில் கிடைக்கும்வரை சபை அமர்வுகளில் பங்கேற்கமாட்டோம் எனவும் அவர்கள் அறிவித்திருந்தனர்.

இந்நிலையில், பாராளுமன்றத்தில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பில் ஆராய்வதற்கான குழுவை சபாநாயகர் நேற்று நியமித்துள்ளார்.

இதற்கமைய சபை அமர்வில் ஐக்கிய மக்கள் சக்தியினர் நேற்று பங்கேற்றனர். (இ)

# நானுஓயாவில் கோர விபத்து!

## ஒருவர் படுகாயம்

நானுஓயா, டிசெ. 09

கனரக டிப்பர் லொறி ஒன்றும் கார் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியில் நானுஓயா, பங்களாஅத்த பகுதியில் நேற்றுக் காலை 9 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஹிங்குராங்கெத்த, ஹேவாஹெட்ட பகுதியிலிருந்து ஹற்றன் பகுதியை நோக்கிச் சென்ற கார் ஒன்றும், தலவாக்கலைப் பகுதியில் இருந்து நுவரெலியா பகுதிக்குச் சென்ற கனரக டிப்பர் லொறி ஒன்றுமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளன. இந்த விபத்தில் காரில் பயணித்த 5 பேரில் ஒருவர் படுங்காயமடைந்த நிலையில் லிந்துலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (இ)

# பாராளுமன்ற நாகரிகத்தை முறையாகப் பின்பற்றவும்

## அனைத்து எம்.பிக்களுக்கும் சபாநாயகர் அறிவுரை

கொழும்பு, டிசெ. 09

"பாராளுமன்றத்தில் குழப்பங்களை ஏற்படுத்தும் விதத்தில் இனியும் நடந்துகொள்ள வேண்டாம். சபை நாகரிகத்தை முறையாகப் பின்பற்றவும்."

- இவ்வாறு ஆளும் மற்றும் எதிரணி உறுப்பினர்களுக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நேற்று சபையில் வைத்து ஆலோசனை வழங்கினார்.

"கடந்த காலங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் மீண்டும் இடம்பெறாத வகையில் கௌரவமாக நடந்து கொள்ளுங்கள். பாராளுமன்ற உறுப்பினர்கள் உரையாற்றும் போது, ஏனைய எம்.பிக்களைத் தனிப்பட்ட ரீதியில் தாக்கிப் பேசுவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது எனது பொறுப்பு. அதனைச் சரிவரச் செய்துள்ளேன்" - என்றார். (இ)

# வல்வெட்டித்துறை நகர சபைக்கு புதிய தலைவர் டிசெ. 15இல் தெரிவு

வடமராட்சி, டிசெ.09

வல்வெட்டித்துறை நகர சபைக்கான புதிய தலைவர் தெரிவு எதிர்வரும் 15ஆம் திகதி சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகர சபையின் 2022ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டம் நவம்பர் மாதம் இரு தடவை தோற்கடிக்கப்பட்டதால் அதன் தலைவர் செல்வேந்திரா பதவியிழந்தார்.

இந்த இடத்துக்கே புதிய வரை நியமிப்பதற்கான தேர்வு எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறும் என வடக்கு உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிரஞ்சன் வர்த்தமான அறிவித்தல் வெளியிட்டுள்ளார்.

2018ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்வு செய்யப்பட்ட சபையில் இதுவரை இருவர் வல்வெட்டித்துறையின் நகர பிதாவாக இருந்த நிலையில் தற்போது மூன்றாவது தடவையாக நகர பிதாவுக்கான தேர்வு இடம்பெறவுள்ளது. (இ - 02)

# வெளிநாடு செல்வோர் எண்ணிக்கை உயர்வு

கொழும்பு, டிசெ. 09

இவ்வருடத்தில் பதிவு செய்யப்பட்ட வெளிநாடு செல்லும் பணியாளர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தைக் கடந்துள்ளது என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

சராசரியாக ஒவ்வொரு வருடமும் 2 இலட்சத்துக்கும் அதிகமான இலங்கையர்கள் வேலைவாய்ப்புக்காக வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர். எனினும், கடந்த வருடம் இந்த எண்ணிக்கை 53 ஆயிரமாகக் குறைவடைந்திருந்தது.

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக ஏற்பட்ட சிக்கல்களால் இந்த வீழ்ச்சி ஏற்பட்டது என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. (இ)

# புதுடில்லி பறந்தது ஏன்? நாளை பஸில் விளக்கம்

கொழும்பு, டிசெ. 09

"இந்தியப் பயணத்தின் நோக்கம் என்ன, பேசப்பட்ட விடயங்கள் எவை என்பன தொடர்பில் நாளை நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெளிவுபடுத்துவார்."

- இவ்வாறு அமைச்சர் எஸ். எம். சந்திரசேன தெரிவித்தார்.

நிதி அமைச்சரின் இந்திய விஜயம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சபையில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வரவு - செலவுத் திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பு நாளை 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அதன்போது இடம்பெறும் நிதி அமைச்சரின் உரையில் இந்திய விஜயம் தொடர்பில் விளக்கமளிக்கவுள்ளதாகத் தெரியவருகின்றது. (இ)



# இந்திய முப்படை தளபதி உட்பட 12 பேர் ஹெலி விபத்தில் மரணம்!





**சென்னை, டிசெ. 09**

**ஹெலிகொப்டர் விபத்தில் இந்தியாவின் முப்படை தளபதி ஜெனரல் பிபின் ராவத் அவரின் மனைவி உட்பட 12 பேர் உயிரிழந்தனர்.**

**தமிழ்நாடு - நீலகிரி மாவட்டம் - குன்னூரில் நேற்று புதன்கிழமை நண்பகல் இந்த விபத்து இடம்பெற்றது.**

நீலகிரி - வெலிங்டனிலுள்ள இராணுவ உயர் அதிகாரிகளுக்கான பயிற்சி கல்லூரியில் இடம்பெறவிருந்த கூட்டத்தில் பங்கேற்க சென்ற சமயமே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கோவை மாவட்டம் சூலூர் விமானப் படைத்தளத்திலிருந்து மு. ப. 11.47 மணிக்கு ஹெலிகொப்டரில் இவர்கள் பயணித்திருந்தனர். குன்னூர் மலைப் பகுதியில் பனிமூட்டம் காரணமாக ஹெலி தாழப் பறந்தது. இந் நிலையில், 12.40 மணியளவில் கட்டுப்பாட்டை இழந்த ஹெலி மரத்துடன் மூன்று முறை மோதி விழுந்து தீப்பற்றியதாகக் கூறப்படுகின்றது.

இந்த விபத்தில் முப்படை தளபதி, அவரின் மனைவி மற்றும் இராணுவ அதிகாரிகள் உட்பட 12 பேர் உயிரிழந்தனர். இருவர் காயமடைந்து இராணுவ மருத்துவமனையில் இருவர் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஐ)



# புருண்டி சிறையில் தீ; 38 கைதிகள் மரணம்!

கிடேகா, டிசெ. 09

கிழக்கு மத்திய ஆபிரிக்க நாடான புருண்டியின் தலை நகர் கிடேகாவில் உள்ள பிரதான சிறைச்சாலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி குறைந்தது 38 கைதிகள் உயிரிழந்தனர்.

இந்த விபத்தில் 60இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என நாட்டின் துணை ஜனாதிபதி ப்ரோஸ்பெர் பஸூம்பன்ஸா தெரிவித்தார்.

கிடேகா நகர சிறைச்சாலையில் நேற்றுமுன்தினம் காலை திடீரென தீ விபத்து ஏற்பட்டது. 400 பேர் மட்டுமே தங்கக் கூடிய இந்தச் சிறையில் 1,500 இற்கும் மேற்பட்ட கைதிகள் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர். இதனால், அதிக உயிரிழப்புகள் ஏற்பட்டதாக புருண்டி ஊடகங்கள் குற்றம் சாட்டியுள்ளன.

எனினும் தீ விபத்துக்கான காரணம் என்ன? என்பது குறித்து புருண்டி துணை ஜனாதிபதி ப்ரோஸ்பெர் பஸூம்பன்ஸா கருத்து வெளியிடவில்லை.

கிடேகாவில் உள்ள பிரதான சிறைச்சாலையில் கடந்த ஒகஸ்ட் மாதமும் தீ விபத்து ஏற்பட்டது. எனினும் இதில் உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை. மின் கசிவு காரணமாக இந்த விபத்து ஏற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இங்கிலாந்தில் 101 பேருக்கு ஒரேநாளில் ஒமைக்ரோன்!

லண்டன், டிசெ. 09

இங்கிலாந்தில் நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை மட்டும் 101 பேர் ஒமைக்ரோன் புதிய கொரோனா திரிபு தொற்றுக்குள்ளாகினர்.

இதனால், இங்கிலாந்தில் ஒமைக்ரோன் திரிபு தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 437 ஆக உயர்ந்துள்ளது.

இதனைவிட இங்கிலாந்தில் நேற்று ஒரே நாளில் புதிதாக 45 ஆயிரத்து 691 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டதாக அந்நாட்டு சுகாதாரத்துறை தெரிவித்தது. இத்துடன், இங்கிலாந்தில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 15 இலட்சத்து 60 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

இங்கிலாந்தில் 12 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களில் கிட்டத்தட்ட 89 வீதம் பேர் குறைந்தது ஒரு தடுப்பூசியைப் பெற்றுள்ளனர். 81 வீதத்திற்கும் அதிகமானோர் இரண்டு இரண்டு தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டனர். 36 வீதத்திற்கும் அதிகமானோர் பூஸ்டர் தடுப்பூசியைப் போட்டுக் கொண்டுள்ளனர்.

இதேவேளை, ஒமைக்ரோன் புதிய திரிபு வைரஸ் டெல்டாவைவிட வேகமாக பரவும் தன்மை கொண்டது என இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜோன்சன் தெரிவித்துள்ளார். பொதுமக்கள் அதிக கவனத்துடன் பாதுகாப்பாக இருக்கும்படி மருத்துவ வல்லுநர்களும் விஞ்ஞானிகளும் வலியுத்தியுள்ளனர். (ஐ)

# ஏனைய திரிபு வைரஸ்களைவிட ஒமைக்ரோன் கடுமையானதல்ல!

## உலக சுகாதார ஸ்தாபனம்

ஜெனிவா, டிசெ. 009

'ஒமைக்ரோன்' திரிபு வைரஸ் முந்தைய கோவிட்-19 திரிபுகளை விட கடுமையான நோயை ஏற்படுத்துவதாகத் தெரியவில்லை என்று உலக சுகாதார ஸ்தாபனத்தின் உயர் அதிகாரியொருவர் செவ்வாயன்று ஏ. எவ். பி. செய்திச் சேவையிடம் கூறியுள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் இரண்டாம் நிலை அதிகாரி குறித்த செய்திச் சேவையிடம் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கோவிட் -19 இன் புதிய, பெரிதும் மாற்றமடைந்த மாறுபாடு பற்றி நிறைய கற்றுக் கொள்ள வேண்டியிருந் தாலும், டெல்டா மற்றும் பிற திரிபுகளை விட இது மக்களை நோய் வாய்ப்படுத்தவில்லை என்று ஆரம்ப தரவு சுட்டிக்காட்டுகிறது.

இதேநேரத்தில் தற்போதுள்ள கோவிட்-19 தடுப்பூசிகளால் வழங்கப்படும் பாதுகாப்பு ஒமைக்ரோனை முழுமையாக இல்லாதொழிக்க முடியும் என்பதற்கான எந்த அறிகுறியும் இல்லை என்றும் அவர் கூறினார். (ஐ)

# 3 குழந்தைகள் பெறுவோருக்கு சீனாவில் சிறப்பு சலுகைகள்!

பீஜிங், டிசெ. 09

சீனாவில் பிறப்பு வீதத்தை அதிகரிக்கும் நோக்குடன் 3 குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளும் தம்பதியருக்கு விசேட சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

3 குழந்தைகளை பெறும் தம்பதியருக்கு மானியங்கள், வரிக்குறைப்பு உள்ளிட்ட சலுகைகளை மாகாண அரசுகள் அறிவிக்கத் தொடங்கியுள்ளன. உலகிலேயே அதிக மக்கள் தொகை கொண்ட சீனாவில் பிறப்புவீதம் சரிந்ததைத் தொடர்ந்து இந்த அறிவிப்புக்கள் வெளியாகியுள்ளன.

சீனாவின் மொத்த மக்கள் தொகை 141.2 கோடியாகும். கடந்த 1976 முதல் 2016 வரை மக்கள் தொகையை கட்டுப்படுத்த சீனாவில் தம்பதியருக்கு ஒரு குழந்தை திட்டம் கடுமையாக கடைபிடிக்கப்பட்டது.

இந்நிலையில், இளம் வயதினர் குறைந்து முதியவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பதால், சமூக, பொருளாதார, வேலைவாய்ப்பில் பல்வேறு எதிர்கால பிரச்னைகளை சந்திக்க வேண்டிய அபாயம் ஏற்படும் என சீனா உணர்ந்தது. இதைத் தொடர்ந்து, 3 குழந்தைகளை பெற்றுக் கொள்ளலாம் என சீன அரசு கடந்த மே மாதம் அறிவித்தது. இது சீனாவின் மிகப்பெரிய கொள்கை மாற்றாகும்.

இப்புதிய திட்டத்தை அமுல்படுத்தும் வகையில் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டது. அத்துடன், மானியங்கள், வரிக்குறைப்பு உள்ளிட்ட சலுகைகளை மாகாண அரசுகள் அறிவிக்க தொடங்கியுள்ளன. 20இற்கும் மேற்பட்ட மாகாணங்களில் திருமண விடுமுறை நீடிப்பு, மகப்பேறு விடுப்பு தாய்மாரை கவனிப்பதற்காக ஆண்களுக்கு விடுமுறை போன்ற சலுகைகளும் அளிக்கப்பட்டுள்ளன. (ஐ)

# ஒமைக்ரோன் திரிபு வைரஸால் ஐரோப்பாவில் பலி உயரலாம்!

பிரெசல்ஸ், டிசெ. 09



ஒமைக்ரோன் திரிபால் வரும் வாரங்களில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் கொரோனா தொற்று வேகமாக அதிகரிக்கும். மருத்துவமனையில் சேர்க்கப்படுவோரின் அளவும், உயிரிழப்பும் அதிகரிக்கும் என்று ஐரோப்பிய நாடுகளுக்கான நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பு எச்சரித்துள்ளது.

ஒமைக்ரோன் வைரஸைக் கட்டுப்படுத்த செலுத்தப்படும் தடுப்பூசிகள் போதுமானதாக இல்லை, தடுப்பூசி செலுத்தாதவர்களும் அதிகமாக இருப்பதால், வரும் வாரங்களில் பாதிப்பு அதிகரிக்கும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

மேலும், விரைவாகவோ மக்கள் கூடுமிடங்களான மதுபான சாலைகள், விடுதிகள் என்பவற்றை மூடவேண்டும். கொரோனா தடுப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவதும் அவசியம். ஒமைக்ரோன் வைரஸால் ஒட்டுமொத்தச் சூழலும் கவலைக்கிடமாக மாறக்கூடும் என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

தெற்காசிய உதைபந்தாட்டம்

# மகாஜன கல்லூரி மாணவிகள் நால்வர் இலங்கை அணியில்!



யாழ்ப்பாணம், டிசெ. 09

பங்களாதேஷில் நடைபெறவுள்ள 19 வயது பிரிவு தெற்காசிய பெண்கள் உதைபந்தாட்ட போட்டியில் பங்குபற்றும் இலங்கை அணியில் தெல்லிப்பழை மகாஜன கல்லூரி மாணவிகள் நால்வர் இடம்பெற்றுள்ளனர்.

பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, நேபாளம், இலங்கை ஆகிய 5 நாடுகள் இந்தப் போட்டியில் பங்கேற்கின்றன. இதில், பங்கேற்கும் இலங்கை அணி நேற்று பங்களாதேஷை சென்றடைந்தது.

இவ்வாறு சென்றடைந்த அணியில் தெல்லிப்பழை மகாஜன கல்லூரியின் சிவனேஸ்வரன் தர்மிகா, உருத்திரகுமார் யோகிதா, ரகுதாஸ் கிருசாந்தினி, மரியநாயகம் வெலன்டினா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இதில், தர்மிகா உதவி அணித் தலைவர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை பெண்கள் உதைபந்தாட்ட வரலாற்றில் வடமாகாணத்தைச் சேர்ந்த வீராங்கனை ஒருவர் 19 வயதுக்கு உட்பட்ட இலங்கை பெண்கள் அணியின் உதவித் தலைவராக நியமிக்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

அத்துடன், இந்த அணியின் பொறுப்பாசிரியையாக மகாஜனா கல்லூரி உதைபந்தாட்ட அணியின் பொறுப்பாசிரியை பத்மநிதி செல்லையா நியமிக்கப்பட்டுள்ளார்.

19 வயதுக்குட்பட்ட இலங்கை பெண்கள் அணியின் தலைவராக விசாகா வித்தியாலய மாணவி இமேஷா வர்ண குலசூரியவும் இரண்டாவது உதவி அணித் தலைவராக கேட்வே கல்லூரி மாணவி மாலிகா அமித்தும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை அணி நாளை மறுதினம் சனிக்கிழமை இடம்பெறவுள்ள முதல் போட்டியில் பூட்டானை எதிர்கொள்கிறது. அத்துடன், 13ஆம் திகதி இந்தியாவையும், 15ஆம் திகதி நேபாளத்தையும், 19ஆம் திகதி பங்களாதேஷையும் எதிர்கொள்கிறது.

லீக் சுற்று முடிவில் முதலிரண்டு இடங்களைப் பெறும் அணிகள் 21ஆம் திகதி நடைபெறும் இறுதிப் போட்டியில் ஒன்றையொன்று எதிர்த்தாடும் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# 147 ஓட்டத்துக்கு இங்கிலாந்தை சுருட்டியது அவுஸ்திரேலியா!

பிரிஸ்பேன், டிசெ. 09

அவுஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகள் மோதும் ஆஷஷ் டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் இங்கிலாந்து அணி 147 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்துள்ளது.

அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் நகரில் நேற்று தொடங்கிய முதல் டெஸ்டில் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணியின் தலைவர் ஜோ ரூட் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

தொடக்க வீரராகக் களமிறங்கிய ரொறி பேர்ண்ஸை முதல் பந்திலேயே ஆட்டமிழக்கச் செய்து அதிர்ச்சி கொடுத்தார் மிற்செல் ஸ்ரார்க்.

அடுத்து வந்த டேவிட் மலனை(6) 4வது ஓவரில் ஹசல்வூட்ட ஆட்டமிழக்கச் செய்தார். தொடர்ந்து களமிறங்கிய ரூட் (0), பென் ஸ்ரோக்ஸ் (5) என்று அடுத்தடுத்து வெளியேற்றி அவுஸ்திரேலியாவின் பந்துவீச்சாளர்கள் சாதித்தனர்.

இதன்பிறகு ஹசீப் ஹமீது - ஒல்லி போப் இணை சற்று நிதானமாக விளையாடி அணியை சரிவிலிருந்து மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

27ஆவது ஓவரை வீசிய கம்மின்ஸ், ஹமீதை(25) ஆட்டமிழக்கச் செய்தார். பின், போப்புடன் சேர்ந்த பட்லர் 39



ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இதன்பிறகு சீரான இடைவெளியில் ஒல்லிபோப் 35, ஒல்லி ரொபின்சன் 0, மார்க் வூட் 8, கிறிஸ் வோக்ஸ் 21 என ஆட்டமிழந்தனர்.

முதல் இனிங்ஸில் இங்கிலாந்து அணி 147 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது.

அவுஸ்திரேலிய அணியின் தலைவர் கம்மின்ஸ் 5 விக்கெட்களை கைப்பற்றி சாதித்தார். மிற்செல் ஸ்ரார்க், ஹசல்வூட் ஆகியோர் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

அவுஸ்திரேலியா அணி துடுப்பெடுத்தாட முன்னர் மழை குறுக்கிட்டமையால் முதல் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டது. (ஐ)



# தம்புள்ளை ஜியான்ட்ஸை வீழ்த்தியது யாழ்ப்பாணம்!

கொழும்பு, டிசெ. 09

தம்புள்ளை ஜியாண்ட்ஸ் அணியை 8 விக்கெட்களால் வெற்றி பெற்றது யாழ்ப்பாணம் கிங்ஸ் அணி.

எல். பி. எல். இருபது - 20 இரண்டாவது தொடர் கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் நடக்கிறது. இதில் நேற்றுமுன்தினம் மாலை நடந்த போட்டியில் யாழ்ப்பாணம் கிங்ஸ் அணியை தம்புள்ளை ஜியான்ட்ஸ் அணி எதிர்த்தாடியது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற தம்புள்ளை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. 19.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்த அந்த அணி 110 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இதில், நுவனிந்து பெர்னாண்டோ 23 ஓட்டங்களை பெற, ஏனைய வீரர்கள் அனைவரும் குறைந்த ஓட்டத்துடன் ஆட்டமிழந்தனர்.

யாழ்ப்பாணம் அணியின் பந்துவீச்சில் வனிந்து ஹசரங்க, மஹேஷ் தீக்ஷன ஆகியோர் தலா 3 விக்கெட்களையும், லக்மால் மற்றும் ஜெய்டன் சீல்ஸ் ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

110 ஓட்டங்கள் என்ற இலகுவான இலக்கு நோக்கி துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் அணி, 12.3 ஓவர்களிலேயே வெற்றி இலக்கைக் கடந்தது.

ஆரம்ப வீரர்களான ரஹ்மானுல்லா குர்பாஸ் 3 ஓட்டங்களுடனும், அவிஷ்க பெர்னாண்டோ 27 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க, ரொம் கோஹ்லர் - காட்மோர் 45 ஓட்டங்களுடனும், சொஹைப் மாலிக் 26 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

போட்டியின் ஆட்டநாயகனாக மகேஷ் தீக்ஷன தெரிவானார்.

(ஐ)

# பரபரப்பான போட்டியில் காலி அணிக்கு வெற்றி!

கொழும்பு, டிசெ. 09

பரபரப்பான போட்டியில் கண்டி அணியை 4 விக்கெட்களால் வெற்றி கொண்டது காலி அணி.

எல். பி. எல். இருபது - 20 இரண்டாவது தொடர் கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் நடக்கிறது. இதில் நேற்று முன்தினம் இரவு நடந்த போட்டியில் காலி கிளாடியேற்றர்ஸ் அணி, கண்டி வோரியர்ஸ் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற கண்டி வோரியர்ஸ் முதலில் துடுப்பெடுத்தாடியது. எந்த ஓட்டங்களும் பெறப்படாத நிலையில் முதல் விக்கெட் வீழ்த்தப்பட்டது. கெனார் லூயிஸ் டக் அவுட் ஆனார். அடுத்து வந்த சரித் அசலங்கவும் 6 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

இதனால் அணியின் முதல் இரண்டு விக்கெட்டுகளும் 16 ஓட்டங்களுக்குள் வீழ்த்தப்பட்டது. மூன்றாவது விக்கெட்டுக்காக கமிந்து மெண்டிஸ் - அஹமட் ஷெஹ்சாத் ஆகியோர் இணைந்து கண்டி அணியை மீட்டெடுத்தனர். 13ஆவது ஓவரில் வெற்றிகரமான ஓட்ட விகிதத்தை தக்கவைத்த கண்டி வோரியர்ஸ் அணி கமிந்துவின் ஆட்டமிழப்பினால் நடுவரிசையில் எதிர்பாராத பின்னடைவை சந்தித்தது.

அணி 99 ஓட்டங்களை பெற்றிருந்த வேளையில் தனஞ்சய லக்ஷானின் பந்து வீச்சில் பென் டன்கிடம் பிடிகொடுத்து கமிந்து மெண்டிஸ் 32 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அவரின் ஆட்டமிழப்பையடுத்து வந்த அஞ்சலோ பெரேரா (10), ரோவ்மன் பவல் (01), ஆகியோர் குறைந்த ஓட்டங்களை பெற்று வெளியேற, ஆரம்ப வீரராக களமிறங்கிய அஹமட் ஷெசாத் 51 பந்துகளில் 56 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழந்தார்.

எனினும், ஏழாவது விக்கெட்டுக்காக டி. எம். சம்பத் மற்றும் இஷான் ஜெயரத்ன ஆகியோர் ஜோடி சேர்ந்த நுவான் துஷாரவின் இறுதி ஓவரில் 19 ஓட்டங்களை பகிர்ந்து கொண்டனர்.

இதனால் கண்டி வோரியர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 143 ஓட்டங்களைக் சேர்த்தது.

144 என்ற இலக்கை துரத்திய காலி கிளாடி



யேற்றர்ஸூக்கு தனுஷ்க குணதிலக - குசல் மெண்டிஸ் நல்லதோர் ஆரம்பத்தை பெற்றுக் கொடுத்தனர்.

இதன்படி இவர்கள் முதலாவது விக்கெட்டுக்காக 61 ஓட்டங்களை பகிர்ந்து கொண்டனர். பின்னர் குசல் மெண்டிஸ் 16 ஓட்டங்களுடனும் தனுஷ்க குணதிலக 45 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க அடுத்தடுத்து வந்த மொஹமட் ஹபீஸ் (13), பென் டன்க் (3), பானுக ராஜபக்ஷ (22) மற்றும் சுமித் படேல் (4) ஆகியோரின் விக்கெட்கள் குறைந்த ஓட்டங்களுக்குள் வீழ்த்தப்பட்டன.

எனினும், லஹிரு மதுசங்க மற்றும் தனஞ்சய லக்ஷானின் 7 ஆவது விக்கெட்டுக்கான இணைப்பாட்டத்தால் நான்கு பந்துகள் (19.2) மீதமிருந்த நிலையில் வெற்றி இலக்கை அடைந்தது காலி கிளாடியேற்றர்ஸ்.

லஹிரு மதுசங்க 13 பந்துகளில் 22 ஓட்டங்களையும், தனஞ்சய லக்ஷான் 4 பந்துகளில் 10 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக 2 விக்கெட்களை கைப்பற்றியதுடன், 10 ஓட்டங்களையும் பெற்ற தனஞ்சய லக்ஷான் தெரிவானார். (ஐ)

# காணி உரிமையை மறுக்கவே முடியாது

## மனோ எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.09

**தமிழ் மக்களின் காணி உரிமைகளை மறுக்க முடியாது என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.**



"எமது காணி, எமது உயிராகும்" என்ற தலைப்பில் கொழும்பு - வெள்ளவத்தையில் நடைபெற்ற காணி உரிமைக்கான மக்கள் கூட்டணி, மக்கள் காணி ஆணைக்குழு கலந்துரையாடலில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"மலையக மக்களுக்கு இரண்டு காரணங்களுக்காகக் காணி தேவை. ஒன்று, வீடு கட்டி வாழ காணி. அடுத்து, விளைநில வாழ்வாதார காணி.

முற்போக்கான இந்தச் செயற்பாட்டை இந்தக் காணி உரிமைக்கான மக்கள் கூட்டணி செய்கின்றது. பாராட்டுகள். நாம் முழுமையாக ஒத்துழைப்போம். இலங்கையில் காணி நில உரிமை பிரச்னைதான் எல்லாப் பிரச்னைகளுக்கும் மூலம்.

1964 சிறிமா சாஸ்திரி உடன்பாட்டில் இலங்கை - இந்திய அரசுகள் மலையக மக்களை அரசியல் ரீதியாக பலவீனப்படுத்திவிட்டன. ஆனாலும், இலங்கை குடியுரிமை பெற்ற மலையக மக்களுக்கு, ஏனைய இலங்கையருக்கு உள்ள அனைத்து உரிமைகளையும் வழங்க இலங்கை அரசு உடன்பட்டது. ஆனால், இன்று ஏனைய இலங்கையருக்கு உள்ள காணி உரிமை எங்களுக்கு மறுக்கப்படுகின்றது. வடக்கு, கிழக்கில் 1958இன் பண்டா - செல்வா, 1965இன் டட்லி - செல்வா உடன்படிக்கை களில் வழக்கு, கிழக்கு மாவட்டங்களில் எப்படி காணி பிரித்து வழங்கப்பட வேண்டும் என விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. ஆகவே, வடக்கு, கிழக்கில் காணி வழங்கல் தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைமை உள்ளது.

1987இல் வந்த அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தில் காணி உரிமை தொடர்பாகக் கூறப்பட்டுள்ளது. ஆகவே, இன்றைய அரசு தனது எதேச்சதிகாரப் போக்கில் தமிழ் மக்களின் காணி உரிமைகளை மறுக்க முடியாது. நாம் எமது காணி நில உரிமைகளைப் பெற, பாது காக்க உறுதி பூண்டுள்ளோம்" - என்றார்.(இ)

## படகு கவிழ்ந்து மீனவர் மாயம்!

கொழும்பு, டிசெ. 09

கந்தர மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கடற்றொழிலுக்குச் சென்ற படகொன்று கவிழ்ந்ததில் மீனவர் ஒருவர் காணாமல்போயுள்ளார்.

தெவிநுவர - கப்புகம பகுதியைச் சேர்ந்த 64 வயதான மீனவரே இவ்வாறு காணாமல்போயுள்ளார்.

குறித்த மீனவர் மேலும் நால்வருடன் 'பியூமிகா 02" என்ற நீண்ட நாள் மீன்பிடிப் படகில் கடந்த 28ஆம் திகதி கடற்றொழிலுக்குச் சென்றுள்ளார்.

மீனவர் சென்ற படகின் இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டதுடன், அலையுடன் படகு இழுத்துச் செல்லப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், குறித்த படகிலிருந்த ஏனைய மீனவர்கள் மற்றுமொரு படகின் மூலம் தப்பியுள்ளனர். (இ)

## பாக். பாதுகாப்பு அமைச்சரின் கருத்துக்கு இலங்கை அரசு வன்மையான கண்டனம்

கொழும்பு, டிசெ. 09



"பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் இலங்கை மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும்."

- இவ்வாறு இலங்கை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சரின் அறிவிப்பொன்று சமூகவலைத்தளங்களில் வெளியாகியுள்ளது.

இலங்கையரான பிரியந்த குமார கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவம், சாதாரண சம்பவம் என அவர் கருத்து வெளியிட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

அது உண்மையெனில் அதனை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். இது தொடர்பில் அவர் இலங்கை மக்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோர வேண்டும். தான் வெளியிட்ட கருத்தை மீளப்பெற வேண்டும்" - என்றார்.

இது மோசமான சம்பவம் என்று சொல்ல முடியாது. உணர்ச்சியில் இது போன்ற செயல்கள் சில நேரங்களில் நடந்து விடுகின்றன என்று கூறி, இலங்கையர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தை பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் நியாயப்படுத்தியுள்ளமை பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது. (இ)

## யானை தாக்கியதில் இருவர் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 09

சூரியவெவ - மீகஹஜந்துர பகுதியில் காட்டு யானை தாக்கியதில் இருவர் உயிரிழந்தனர்.

குறித்த பகுதியைச் சேர்ந்த 36 மற்றும் 49 வயதான இருவர் நேற்று அதிகாலை காட்டு யானை தாக்குலுக்கு இலக்காகி உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதனிடையே, யானை - மனித மோதல் அதிகளவில் காணப்படும் பகுதிகளில் தற்போது அமைக்கப்பட்டுள்ள மின்சார வேலிகளுக்கான இரண்டாம் தடுப்பை அமைப்பதற்கு வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. (இ)

## சகல சமூகத்தினரும் ஏற்கக்கூடிய அதிகாரப் பகிர்வே வேண்டும்!

### முன்னாள் எம்.பி திலகராஜ்

கொழும்பு, டிசெ. 09

அதிகாரப் பகிர்வு என்பது, அனைத்து சமூகத்தினருக்கும் ஏற்புடையதாக இருக்க வேண்டும் என்று, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். திலகராஜ் வலியுறுத்தியுள்ளார்.

சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் ஏற்பாட்டில், முன்னாள் சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில், சூம் தொழில்நுட்பத்தினூடாக இடம்பெற்ற புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்கான முன்மொழிவுகள் குறித்த கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இதனை தெரிவித்தார்.

மேலும், 1987ஆம் ஆண்டு அதிகார பகிர்வு முறைமை ஒன்றாக மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டபோது, அதற்கு வலு சேர்க்கும் விதமாக, அதுவரை நடைமுறையில் இருந்த "கம்சபா" முறைமை பிரதேசசபை முறை யாக மாற்றப்பட்டபோது, கம்சபா முறைமையில் உள்வாங்கப்பட்டிருக்காத மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கு சேவையாற்ற பிரதேச சபை சட்டத்திலும் வாய்ப்பு வழங்கப்பட வில்லை.

எனவே, புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தின் போது எத்தகைய அதிகாரப்பகிர்வு முறைமையாயினும் அது நாட்டில் வாழும் சகல மக்களுக்கும் ஏற்புடையதாக அமைதல் வேண்டும். அதாவது, அதிகார அலகுகளின் எல்லாப்படிநிலையிலும் வினைத்திறனாகக் கையாளக்கூடிய விடயதானங்கள் அத்தகைய படிநிலைக்கு வழங்கப்படல் வேண்டும்.

உள்ளூராட்சிமன்ற படிநிலையானது, அரசாங்கத்தின் அடுக்கு ஒன்றாக அங்கீகரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், மாகாண சபை அதிகாரங்களை முதன்மை அதிகார பகிர்வு அலகாக அரசியலமைப்பு உறுதிசெய்ய வேண்டும் என்பது எமது முன்மொழிவாகும் - என்றார்.




# நாளாந்தத் தொற்றாளர்கள் அதிகரிப்பு பண்டிகைக் காலத்தில் மிக அவதானம்

## பொதுச் சுகாதார பரிசோதகர்கள் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 09

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் சுகாதாரத்தைக் கடைப்பிடிக்காத பட்சத்தில், கொரோனா நோய் பரவும் அபாயம் உள்ளது எனப் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நாளாந்தம் பதிவாகும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையை விட அதிகளவான தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர் எனவும் குறித்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

சுகாதார சட்டத்தை மீறிப் பொருட்களை விற்பனை செய்பவர்களுக்கு எதிராகவும், அவ்வாறான இடங்களுக்குள் பிரவேசித்து சுகாதார சட்டத்தை மீறிச் செயல்படுபவர்களுக்கு எதிராகவும் கடுமையான சட்டங்கள் அமுல்படுத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுப் போக்குவரத்தில் சுகாதார நடைமுறைகள் கடுமையான முறையில் மீறப்படுகின்றன எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (இ)

ஈழநாடு
Eelanadu

# பாகிஸ்தானில் நடந்த கொடூரம் இலங்கையிலும் நடந்துள்ளது!

**சபையில் சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு**

**கொழும்பு, டிச. 09**

**"பாகிஸ்தானில் நடந்ததுபோல் இலங்கையிலும் பல சம்பவங்கள் நடந்துள்ளன. அதுவும் அரச அனுசரணையில்கூட இடம்பெற்றுள்ளன."**

**- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.**



பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"பாகிஸ்தானில் இலங்கையர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்தை நாம் கண்டிக்கின்றோம். தோழர் பிரியந்த குமாரவின் குடும்பத்தாருக்கு அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாகிஸ்தானில் நடந்த சம்பவத்தை இலங்கையிலுள்ள இளைஞர்கள் கண்டிக்கின்றனர். அனுதாபம் தெரிவிக்கின்றனர். இலங்கையிலும் இப்படியான பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

1956, 1958 காலப்பகுதியில் அரச அனுசரணையுடன் தமிழர்கள்மீது தாக்குதல்கள் இடம்பெற்றன. தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டனர். கறுப்பு ஜூலையின்போதும் தமிழ் இளைஞர்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். அவை தொடர்பான படங்களும் உள்ளன" - என்றார்.

## பதவியைத் தக்கவைப்பதற்கே சபை அமர்வில் சஜித் பங்கேற்பு

**சொல்கின்றார் அமைச்சர் ஜோன்ஸ்டன்**



கொழும்பு, டிச. 09

வெளிநாட்டிலிருந்து திரும்பிய ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றம் வந்தவுடன் தனது எதிர்க்கட்சித் தலைவர் பதவி பறிபோய்விடுமோ என்ற அச்சத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சபை அமர்வுகளில் பங்கேற்கின்றார் என்று தெரிவித்த அரசு தரப்பு பிரதம கொறடாவும் அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் சபை அமர்வு புறக்கணிப்பு தொடர்பில் நேற்றுமுன்தினம் முன்னாள் பிரதமரும் ஐ.தே.க. தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் தனது கருத்தை முன்வைத்தபோதே இவ்வாறு தெரிவித்த அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மேலும் கூறுகையில்,

"ரணில் விக்கிரமசிங்க இங்கு கருத்துக் கூறிக்கொண்டிருக்கும்போது எனக்கு தொலைபேசி அழைப்பொன்று வந்தது. அதில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாளை (நேற்று) முதல் சபை அமர்வுகளில் பங்கேற்பதாக சபாநாயகருக்குத் தெரியப்படுத்தியிருப்பதாகக் கூறினார்கள்.

ரணில் விக்கிரமசிங்க வெளிநாடு சென்றதால்தான் சஜித் பிரேமதாஸ தைரியமாக சபை அமர்வைப் புறக்கணித்தார். தற்போது ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பி பாராளுமன்றம் வந்துள்ளதால் தனது எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு ஆபத்து வந்து விடுமோ என்ற அச்சம் சஜித் பிரேமதாஸவுக்கு ஏற்பட்டுவிட்டது. அதனால்தான் அவர் சபை அமர்வுகளில் பங்கேற்பதாக அறிவித்துள்ளார்" - என்றார். (இ)

## மருத்துவபீட மாணவன் மரணம்:
## முன்னரே தகவல் வெளியானது எப்படி? அறிக்கை கோரியது யாழ். நீதிமன்றம்

வடமராட்சி, டிசெ. 09

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் மரணம் தொடர்பில் முன்கூட்டியே தகவல் வெளியானமை தொடர்பில் அறிக்கை சமர்பிக்குமாறு யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிவான் பீற்றர்போல் கோப்பாய் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

மாதா கோவில் வீதி, துன்னாலை வடக்கு பகுதியைச் சேர்ந்த யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மூன்றாம் வருட மாணவனான சிதம்பரநாதன் இளங்குன்றன் என்பவர் வாடகைக்கு தங்கியிருந்து கல்வி கற்றுவந்த வன்னியசிங்கம் வீதி, கோண்டாவில் கிழக்கில் உள்ள வீட்டில் மர்மமான முறையில் தூக்கில் தொங்கிய நிலையில் கடந்த 17.11.2020 அன்று சடலமாக மீட்கப்பட்டார்.

இது தொடர்பான வழக்கு விசாரணை யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிவான் பீற்றர்போல் முன்னிலையில் கடந்த 13.11.2021 அன்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது சிரேஷ்ட சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா மரணமான மாணவன் சார்பில் மன்றில் ஆஜராகியிருந்தார். இதன்போது முன்கூட்டியே தகவல் வெளியானமை தொடர்பில் சந்தேகம் இருப்பதாகவும் ஒரு புலன் விசாரணையை மேற்கொள்ளுமாறு மன்றில் கோரினார்.

முன்கூட்டியே தகவல் வெளியானமை தொடர்பில் கோப்பாய் பொலிஸாரிடம் தகவல்களை வழங்குமாறு நீதிவான் பணிப்புரை விடுத்திருந்தார். மீண்டும் விசாரணை நேற்று புதன்கிழமை எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் முன்கூட்டியே தகவல் வெளியானமை தொடர்பிலான தகவல்கள் பதியப்பட்டு உள்ளன என்றும், தொலைபேசி இரசாயன பகுப்பாய்வு அறிக்கை இன்னமும் கிடைக்கவில்லை எனவும் அதனை துரிதமாக பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் பொலிஸார் மன்றில் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து தொலைபேசியின் இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கையை பெறுவதற்கு உரிய திணைக்களத்திற்கு அறிவிப்பதாகவும் முன்கூட்டியே தகவல் வெளியானமை தொடர்பிலான அறிக்கையை மன்றுக்கு சமர்ப்பிக்குமாறும் நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ஐ)

## சபாநாயகரை அவசரமாக சந்தித்தார் சீனத் தூதுவர்



கொழும்பு, டிச. 09

இலங்கைக்கான சீனத் தூதுவர் ஷீ ஜன்ஹொங், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவை நேற்று சந்தித்தார்.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் சீனா மற்றும் இலங்கைக்கிடையிலான இரு தரப்பு உறவுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இலங்கை மற்றும் சீனாவுக்கிடையிலான உறவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது எனத் தகவல்கள் வெளியாகும் நிலையிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. (இ)










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.12.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் உளவள துனையாளர்
திரு.நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி-ஜோன்சன்
ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ - மறுஒளிபரப்பு
**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : நலம்தானா-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-
தங்கமீன்கள்,டீமொண்டி காலனி
திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான
நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை
**இரவு**
7.00 மணி : சமையல் சமையல்




7.30 மணி : வெள்ளிடை நுட்பம்-
தொழில்நுட்பம் பயன்பாடுபற்றிய
நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : கச்சேரி ஆரம்பம்
10.00 மணி : நேருக்கு நேர்-அரசியல் நிகழ்ச்சி

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்
பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்
**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர
மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : அன்னை மரியா (மறுஒளிபரப்பு சனி)
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை
(மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஞானவழி மறு ஒளிபரப்பு ஞாயிறு
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை
(மறு ஒளிபரப்பு)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு
**பகல்**
12.00 மணி : துகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்